விலை: 60.00 பக்கங்கள் : 24

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

சங்குநாதம்

சங்கு 25 ஒலி 327 வள்ளுவர் ஆண்டு 2055

ஐப்பசி 24 ஞாயிற்றுக்கிழமை (10.11.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




# மின்சாரக் கட்டணம் குறைக்கப்படும்

## ஜனாதிபதி அநுர



*(தம்புள்ளை)*

மின்சாரக் கட்டணத்தை 30 வீதத்துக்கு மேல் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

*(23ஆம் பக்கம் பார்க்க)*

## யாழ்.இளைஞன் கட்டுநாயக்கவில் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.இளைஞன் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

போலி நுழைவுச்சீட்டைப் பயன்படுத்தி பிரான்ஸுக்கு தப்பிச் செல்ல முயன்ற இளை 23

## மண்வெட்டியால் தாக்கி பெண் கொலை


### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

மண்வெட்டியால் தாக்கிப் பெண்ணொருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா ஈச்சங்குளம் பகுதியில் நேற்று இச்சம்ப 23














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பாராளுமன்றத் தேர்தல் - 2024

### வன்னி மாவட்டம்



**வன்னி வாக்காளப் பெருமக்களே!**

இதுவரை எமது இனம் சுமந்த வலிகளையும் சந்தித்த இழப்புக்களையும் அதற்காக கொடுத்த விலைகளையும் என்றும் நான் மறந்துவிடப் போவதில்லை. எதையும் பாராமுகமாக கடந்து செல்ல மாட்டேன். அனைத்து விடயங்களிலும் எப்போதும் நான் விசுவாசமாகவும் உண்மையாகவும் இருந்து செயற்படுவேன்.

**எமது மக்களுடன் நான்:**

கலாநிதி

**நவரத்தினம் ரவீந்திரகுமாரன்**

முன்னாள் பொருளியல் சிரேஸ்ட விரிவுரையாளர்

(கொழும்புப் பல்கலைக்கழகம், வவுனியாப் பல்கலைக்கழகம்)

**வன்னி மண்ணின் வளமான எதிர்காலத்திற்காக உங்களுடன் நான்...**

X 5

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

(C-172)

## பாராளுமன்றத் தேர்தல் - 2024

### யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்



**அன்பான மக்களே!**
**நம்பிக்கையுடன் எங்களை ஆதரியுங்கள்!**



**வீ.ஆனந்தசங்கரி**
(முதன்மை வேட்பாளர்)

இல. 8



**செல்லையா சுந்தரமூர்த்தி**

தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF)

X இல. 9

நேர்த்தியான நெடும் பயணம்!

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
|---|---|---|---|---|---|---|---|---|

(036)


## வரதாஞ்சலி



அமரர். **தம்பிப்பிள்ளை வரதராஜா**

(அதிபர், Express institute, இருபாலை)

*காலமெல்லாம் கணிதத்துறை விளங்க*
*கனவுகளோடு காத்திருந்தோம் நாம் இன்று!*
*கண்ணிமைக்கும் நேரத்தில் கதிகலங்க*
*காலன் வந்தானோ உம்மைத் தேடி...!*

*வாழும் வரை நும்புகழ் ஓம்பும்*
*வரதன் sir என்ற நாமம் எங்கும் ஒலிக்கும்!*
*வார்த்தைகள் தடுமாற வாழ இருக்கின்றோம்.*
*வர வேண்டும் வர வேண்டும் மறு பிறப்பெடுத்து...*

நீங்கா நினைவுகளுடன்... திருமதி.கோமதி ஞானச்சந்திரன்
நீர்வேலி [சுவிட்சலாந்து]

(C-1554)

## சொகுசு வாகனம் மீட்பு

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பில் இலக்கத் தகடு இல்லாத சொகுசு வாகனம் ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளதாக நீர்கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

நீர்கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த சொகுசு வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வெளிநாட்டில் உள்ள தனது சகோதரன் ஊடாக இந்த சொகுசு வாகனம் தனக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக சொகுசு வாகனத்தின் உரிமையாளர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

(ம-7)


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி நெய்தல் நகருக்கு அருகாமையில் 84 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- 20 அடிப் பாதையுடன் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- இரண்டு ஆண்டுகள் பூர்த்தியான தென்னங்கன்றுகள் உள்ளன.
- இரண்டு பரப்புள்ள துண்டொன்றுக்குள் 6 - 10 வரையான தென்னங்கன்றுகள் உள்ளன.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்.

ஒரு பரப்பின் விலை

- நெய்தல் நகர் பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்.
- கடற்கரையை (Beach) முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்.
- 20 அடிப் பாதையை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் அனைத்தும் 9,75000 ரூபாய் மட்டுமே.
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம்
  காலை 6 மணி தொடக்கம்
  மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு : ஜெயம்

077 614 7389, 077 986 5457

(2591)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பாராளுமன்றத் தேர்தல் - 2024

## யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்




### உரிமைக்கான போராட்டக் களங்களில்....


சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில்


வெடுக்குநாறி மலையில் பொலிசாரினால் சிவராத்திரி தினத்தன்று கைது செய்யப்பட்டவர்களை வழக்காடி விடுவித்தபோது


யாழ் பல்கலைக்கழக முள்ளிவாய்க்கால் தூபி உடைக்கப்பட்டபோது


தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டத்தில்



பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணியில்



ஜனாதிபதியின் வருகைக்கெதிரான ஆர்ப்பாட்டத்தில் பொலிசாரினால் கைது செய்யப்பட்டபோது

### தமிழரின் உரிமைக்காக ஐக்கிய நாடுகள் சபையில்...









### இலக்கு ஒன்றே இனத்தின் விடுதலை!





## தடம் பதித்த சுவடுகள் சில ...

- 2003: யாழ்ப்பாணக் கல்லூரியின் மாணவத் தலைவன்.
- 2005: யாழ் பல்கலைக்கழகச் சட்ட மாணவர் சங்கத்தின் முதலாவது தலைவன்.
- ஈழத் தமிழருக்கு நீதிகேட்டு ஐக்கிய நாடுகள் சபை உட்படச் சர்வதேச மன்றங்களில் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வருகின்றமை.
- காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், அரசியல் கைதிகளின் விடுதலை, இராணுவத்தின் வசமுள்ள பொது மக்களின் காணிகளை விடுவித்தல் போன்றவற்றிற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலும் ஜனநாயகப் போராட்டக் களங்களிலும் முன்னின்று செயற்படுகின்றமை.
- தையிட்டி, நிலாவரை, காரைநகர், மண்டைதீவு, மாதகல், சுழிபுரம் (பறாளாய்), கிளிநொச்சி (உருத்திரபுரீச்சரம், பொன்னாவெளி, சந்திரன் பூங்கா), குருந்தூர்மலை, வெடுக்குநாறி மலை, மாதவனை, மயிலத்தமடு, கல்முனை என்றவாறாகத் தமிழர் தேசம் எங்கும் நிலமீட்புப் போராட்டங்களில் தன்னை அர்ப்பணித்தமை.
- நூற்றுக்கும் மேற்பட்ட பொதுநல வழக்குகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்காகக் கட்டணமின்றி வழக்காடியமை.
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் தூபி உடைக்கப் பட்டபோது மாணவர்களுக்குத் துணையாக நின்று உடைக்கப்படவிருந்த மாவீரர் தூபியை உடைக்கவிடாமல் தடுத்து நிறுத்தியமை.
- நாட்டுப்பற்றாளர் நடேசன் அறக்கட்டளை வாயிலாக உதவி வேண்டும் மக்களுக்குக் கல்வி, விளையாட்டு, மருத்துவம் மற்றும் வாழ்வாதாரப் பணிகளை முன்னெடுத்து வருகின்றமை.
- நீதியைப் பெறுவதற்கு ஏழ்மை தடையாகி விடக்கூடாது என்பதற்காகத் "தமிழர் உரிமைகள் கண்காணிப்பகம்" (Tamil Rights Watch) எனும் இலவசச் சட்ட மையத்தினைச் செயற்படுத்தி வருகின்றமை.
- தமிழ்த் தேசத்தில் இளைஞர், யுவதிகளுக்குச் சுயதொழிற் பயிற்சிகளை வழங்கித் தற்சார்புப் பொருளாதாரத்தின் அடிப்படையில் அவர்களைத் தொழில் முயற்சியாளர்களாக்கும் இலக்கோடு "இலவசப் பயிற்சி மையம்" வட்டுக்கோட்டையில் கட்டமைக்கப்பட்டு வருகின்றது.

ஈழத் தமிழரின்
உரிமைக் குரலை ஆதரிப்போம்!



கனகரட்ணம்
# சுகாஷ்
(சட்டத்தரணி)

**கனகரட்ணம் சுகாஷ்** ஆகிய நான்,




தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைசார் அரசியல் பயணத்தில் கொள்கை தவறாது என்றும் மாவீரர்கள் காட்டிய பாதையில் நேர்மையுடன் பயணிப்பேன் என இத்தால் உறுதியளிக்கின்றேன். இப்பயணத்தில் நான் தடம்மாறினால் எந்நேரமும் எவ்விடத்திலும் என்னைக் கேள்வி கேட்கவும், ஏன் தூக்கி வீசவும் உங்களுக்குப் பூரண உரிமையும் அதிகாரமும் உண்டு.

தொ.இல: 077 936 1354

அன்புரிமையுடன்,
S. Sukash

(சு-173)




## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

## அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

தாயகம் - தேசியம் - சுயநிர்ணய உரிமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊழலை ஆதரித்தவர்களுக்கு அமைச்சுப் பதவி கிடைக்காது

### பிமல் ரத்நாயக்க

(யாழ்ப்பாணம்)

கடந்த அரசாங்கத்திலிருந்து கொண்டு அவர்களை ஆதரித்து ஊழலுக்குத் துணை போன எவருக்கும் தேசிய மக்கள் சக்தியில் அமைச்சர் பதவி கிடைக்காது என அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம்-பலாலிப் பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாட்டின் சட்டம் சிறுபான்மை மக்களுக்கு ஒரு விதமாகவும் பணம், பொருள் படைத்தவர்களுக்கு அவை வேறு விதமாகவும் கடந்த காலங்களில் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

எனவே, அனைவருக்கும் நீதி சமமாக வழங்கப்பட வேண்டும் என்பதற்காகவே நாங்கள் பாராளுமன்றத்திற்கு ஊழலற்றவர்களைத் தேர்வு செய்து அனுப்ப வேண்டும்.

தற்போது டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியுடன் புகைப்படம் எடுத்து அமைச்சுப் பதவியைப் பெறப்போவதாகக் கூறுகிறார்.

எவ்வாறாயினும், தேசிய மக்கள் சக்தியில் போட்டியிட்டு வெற்றிபெறுபவர்களுக்கே அமைச்சுப் பதவிகள் பகிரப்படும் என தேசிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (ம-7)

## 90 ஆயிரம் பொலிஸார் தேர்தல் பாதுகாப்பில்

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 90 ஆயிரம் பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைத்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பாராளுமன்றத் தேர்தலுடன் தொடர்புடைய சகல பிரசார நடவடிக்கைகளும் நாளை நள்ளிரவுக்குள் நிறைவு செய்யப்பட வேண்டும் என கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துரைத்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார். (ம-7)

காணி அவசர விற்பனைக்கு
(URGENT SALE)
யாழ்ப்பாண மாநகரசபைக்குட்பட்ட யாழ்ப்பாணம்
காரைநகர் வீதி ( கசூரினா கடற்கரை செல்லும் வழி )
காக்கைதீவு கடற்கரைக்கு அருகாமையில் தென்னை
மரங்களுடனான 40 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
1 பரப்பு - 15 இலட்சம்
தரகர்கள் தேவையில்லை.
(2599)
தொடர்புகளுக்கு: 077 476 4817

## முறையான கல்வியால் வறுமையை ஒழிக்கலாம்

### ஜனாதிபதி அநுர

(குருநாகல்)

குழந்தைகளுக்கு முறையான கல்வியை வழங்குவதன் ஊடாக இந்த நாட்டில் வறுமையை இல்லாதொழிக்கும் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தவுள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

குருநாகலில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க,

கடந்த ஜனாதிபதி தேர்தலில் தந்தையிடமிருந்து மகனுக்கு அதிகாரம் செல்லும் என எதிர்பார்க்கப்பட்டது. அரசாங்கத்தை வைத்திருந்த ஜனாதிபதி, மாமாவிடமிருந்து மகனுக்கு அதிகாரத்தை எதிர்பார்த்தார். ஆனால் இந்நாட்டு மக்கள் செப்டம்பர் 21 அன்று அந்த ஊழல் மற்றும் நாசகார குடும்பங்கள் அனைத்தையும் தோற்கடித்து சாதாரண மக்களுக்கு அதிகாரத்தை மாற்றினர்.

அந்த ஊழல்வாதிகள் கனவிலும் நினைத்திருக்க மாட்டார்கள் தங்களது வாழ்நாள் காலத்தில் இவ்வாறானதொரு சம்பவமொன்று நடக்கும் என்று, எவ்வாறாயினும், மீண்டும் அவர்களின் கைகளுக்கு அதிகாரம் மாற்றப்படாது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

நமது அரசின் மிக முக்கியமான திட்டம் கிராமப்புற வறுமையை ஒழிப்பதாகும். நல்ல கல்வியையும் அறிவையும் அரசால் வழங்க முடியுமானால், அந்த குடும்பம் ஏழைக் குழந்தையைப் படிக்க வைத்து அவர்களின் வறுமையில் இருந்து மீண்டு வருவர். ஆனால் அந்தக் குடும்பம் ஏழ்மையானதாகவும், குழந்தை படிக்காதவராகவும் இருந்தால், அந்தக் குடும்பம் ஏழ்மையானது, இது சுழற்சி வறுமையின் நெருக்கடியாகும் என்றார். (ம-7)

## சீனாவால் வழங்கப்பட்ட நிதி திறைசேரிக்கு அனுப்பி வைப்பு


(கொழும்பு)

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 30 வரை, இயற்கை அனர்த்தங்களால் சேதமடைந்த வீடுகள் மற்றும் சொத்துக்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக சீனாவால் வழங்கப்பட்ட சுமார் 30 மில்லியன் ரூபா நிதி உதவி திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், இயற்கை அனர்த்தங்களினால் சேதமடைந்த மக்களின் வீடுகளைப் புனரமைப்பதற்காக தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்திலிருந்து பாதுகாப்பு அமைச்சுக்கு மேலதிக நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களம் அந்த நிதியை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்கியுள்ளது.

மேலும், சேதமடைந்த வீடுகள் மற்றும் உடைமைகளுக்கான இழப்பீட்டுத் தொகையை வழங்குதல், வீடுகளின் கட்டுமானம் மற்றும் மறுசீரமைப்புப் பணிகளையும் அனர்த்த நிவாரணம் மற்றும் கண்காணிப்புத் திட்டத்தின் ஊடாக விரைவாக நிறைவேற்றவும், தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-7)

# மரண அறிவித்தல்




## கோடீஸ்வரன் சுப்புலக்சுமி

பூநகரியைப் பிறப்பிடமாகவும் ஓமந்தை, வைரவ புளியங்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கோடீஸ்வரன் சுப்புலக்சுமி அவர்கள் 09.11.2024 சனிக்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் கோடீஸ்வரன்(வவுனியா ஓமந்தை, ஆறுமுகம் ஸ்ரோஸ் உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஆறுமுகம் - செல்லம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற ஆறுமுகம் - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும் நகுலாம்பிகை, காலஞ்சென்ற சுந்தராம்பாள், பாலகிருஸ்ணன், பாலச்சந்திரன்(சுவிஸ்), றஞ்சிதமலர்(நோர்வே), புஸ்பராணி(ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பிரசாந்தி, குணசாந்தி, மதனசாந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும் அரவிந்தன்(லண்டன்), ராஜரூபன்(கொழும்பு), திருவேகரன்(வைத்தியர் - வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவாணி,ராகுல், நேத்திரா, ஆதவன், கவின், நிரந்தனா ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், சுப்பிரமணியம் மற்றும் சிவராமா, தங்கராசா, புவனேஸ்வரி, சந்திரரோதயம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.11.2024 நாளை திங்கட்கிழமை காலை 10 மணியளவில் வைரவ புளியங்குளத்தில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மருமகன் - 077 060 7123
(திருவேகரன்)


(529)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## பாராளுமன்ற தேர்தல் - 2024

யாழ். கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்



மக்களோடு நாம்
மக்களுக்காக நாம்

தமிழ் தேசியத்தின்
சின்னம் – சங்கு



6

பாலச்சந்திரன்
கஜதீபன்
(ஆசிரியர், முன்னாள் மகாகண சபை உறுப்பினர்)

5

தருமலிங்கம்
சித்தார்த்தன்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

(சி-1777)

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி (தமிழ் தேசிய கூட்டமைப்பு)

## பாராளுமன்ற தேர்தல் 2024

யாழ் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

உண்மை, நேர்மை, அர்ப்பணிப்பு
ஆளுமை, செயல்திறன்
மாற்றங்களை நிகழ்த்தும்
ஆற்றல்.

முதன்மை வேட்பாளர்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
முருகேசு சந்திரகுமார்

ஐக்கிய மக்கள் சக்தி





8

(076)

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
|---|---|---|---|---|---|---|---|---|

## பாராளுமன்றத் தேர்தல் 2024 யாழ் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்




2
கஜேந்திரகுமார்
பொன்னம்பலம்
LLB (Hons)
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

5
நடராஜர்
காண்டீபன்
LLB (Hons)
சிரேஸ்ட சட்டத்தரணி

9
செல்வராசா
கஜேந்திரன்
BBA
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

இரு தேசங்கள்
ஒரு நாடு



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் கலந்து கொள்ளும்

மாபெரும் பொதுக்கூட்டம்...!

10.11.2024 (ஞாயிறு) மல்லாகத்தில்...!

மாலை 4.30 மணிக்கு


மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம் முன்பாக

(சி-175)

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் - தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற தேர்தல் - 2024
# ஸ்ரீ லங்கா தொழிலாளர் கட்சி




## வன்னித் தேர்தல் மாவட்டம்

## தி.இடபாளுடன்

*(மல்லாவி பிள்ளையார் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)*

## எங்கள் வன்னி
## எங்கள் மக்களுக்கு!



X

~~1~~ X | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9

(082)

---




8

## பாராளுமன்றத் தேர்தல் - 2024

**வைத்திலிங்கம் குகதாஸ்**

B.A (COL), PGDM (SJ), PGDM (RU), SLACS CLASS I
(ஓய்வுநிலை கணக்காய்வாளர் (வடமாகாணம்)



X

**கலாநிதி கா.விக்னேஸ்வரன்**

பொறியியலாளர், வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரின் செயலாளர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்.



2

1. அகில இலங்கை தமிழர் மகாசபையானது மக்களின் ஆணையைப் பெற முனைவதன் நோக்கம், பாராளுமன்றத்தில் இருந்துகொண்டு மாகாண சபைகளை முழுமையாக இயங்குவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காகவே. நல்லாட்சிக் காலத்தில் மாகாண சபைகளை ஒழிப்பதற்கான செயற்பாடுகளில் வடக்கில் செயற்படும் தமிழர் கட்சிகள் முக்கிய பங்கை வகித்தன. அக்கட்சிகளைத் தோற்கடிப்பது எமது முதலாய கடமையாகும்.

தேர்தலில் வெற்றி பெற்றதும் முதல் பணியாக நாம் எந்த யாப்புத் திருத்தமோ புதிய பாராளுமன்றச் சட்டமோ தேவைப்படாத நடவடிக்கைகளில் ஈடுபடுவோம். அவையாவன:

(1) மாவட்ட நிர்வாகங்களை மாகாண நிர்வாகத்தின் கீழ் கொணர்தல்.
(2) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள அரச வெற்றிடங்களையும் பாடசாலைகளில் உள்ள ஆசிரிய வெற்றிடங்களையும் உடனடியாக நிரப்புதல்.
(3) பொலிஸ் அதிகாரம் தற்காலிகமாக மத்தியிடம் இருந்தாலும் பிராந்தியங்களுக்காக தலா 2,000 உத்தியோகத்தர் வீதம் வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகிய பிராந்தியங்களில் இருந்து 6,000 தமிழர்களை பொலிஸில் சேர்ப்போம்.
(4) காரைநகர் சீநோர் நிறுவனத்தில் உடனடியாக இந்திய நிதியுதவியைக் கொண்டு பணிகளை ஆரம்பிப்போம். அந்நிறுவனத்தின் உதவியுடன் நயினாதீவுக்கும் நெடுந்தீவுக்கும் அம்புலன்ஸ் படகுகளை அன்பளிப்பு செய்வோம்.
(5)காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் பணிகளை ஆரம்பிப்போம். அதற்காக கிளிங்கரை இறக்குமதி செய்வோம்.
(6) ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையை உடனடியாக இயங்க வைப்போம்.
(7) இரணைமடு நீர்த்தேக்கத்தில் இருந்து கிளிநொச்சி விவசாயிகளின் வாழ்க்கையைப் பாதிக்காமல் யாழ் குடாநாட்டிற்கு குடிநீர் வழங்குவோம்.
(8) யாழ் குடாநாட்டு நிலநீரைப் பாதுகாப்பதற்காக, அரியாலை, தொண்டமானாறு கட்டணைகளோடு சுண்டிக்குளத்திலும் ஒரு கட்டணையைக் கட்டுவோம்.
(9)ஆனையிறவு, தனன்கிளப்பு, குறிஞ்சாத்தீவு, மாந்தை ஆகிய இடங்களில் உப்பு உற்பத்தியைப் பெருக்குவோம்.
(10) வேலணை, மல்லாவி ஆகிய இடங்களில் ஆடைத் தொழிற்சாலைகளை அமைப்போம்.
(11) குருநகர் மீன்வலைத் தொழிற்சாலையை இயங்கவைப்போம்.
(12) கடந்த 34 ஆண்டுகளாக மத்திய அரசு மாகாணங்களிடமிருந்து பறித்தெடுத்த பாடசாலைகள், மருத்துவமனைகள், சுற்றுலா மையங்கள், கமநல சேவை நிலையங்கள் முதலியவற்றை மீளப் பெற்றெடுப்போம்.

3. மாகாண சபைகள் முழுமையாக அதிகாரங்களைப் பயன்படுத்த வேண்டுமானால் ஒவ்வொரு சபைக்கும் 100 நியதிச் சட்டங்கள் இருக்கவேண்டும். வடமேல் மாகாணத்தில் 71 நியதிச் சட்டங்களும், மேல் மாகாணத்தில் 70 சட்டங்களும் உள்ளன. வடக்கு மாகாண சபையை நிர்வகித்த தமிழர் அரசியல் கட்சி நியதிச் சட்டங்களை உருவாக்குவதை விரும்பவில்லை. ஆயினும், நாம் அவ்விரு மாகாணங்களையும் தழுவி, 70 நியதிச் சட்டங்களின் நகல்களையும் வடக்கு, கிழக்கு ஆகியவற்றிற்கு மிகவும் அவசியமான காணி, தொல்பொருள், கடல்தொழில், உயர் கல்வி, தாதியர் கல்வி, கைத்தொழில்கள், முதலிய விடயங்களில் 30 நியதிச் சட்ட நகல்களையும் உருவாக்குவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவோம்.
4. இவ்வாறு 100 நியதிச் சட்ட வரைபுகள் தயாரானதும் ஜனாதிபதியானவரின் விசேட அதிகாரத்தைப் பயன்படுத்தி அந்நியதிச் சட்டங்களுக்கு உரிய சம்மதத்தைப் பெறுவோம்.
5. மேலே குறிப்பிட்ட செயற்பாடுகளுக்கு 9 மாதங்கள் தேவைப்படும். அதன் பின்னர் அதாவது 2025 ஆகஸ்டில் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடாத்தி அவற்றை முழுமையாக செயற்பட வைப்பதே எமது கட்சியின் நோக்கமாகும். இவ்வழியைப் பின்பற்றி, நாம் எமது சொந்தப் பிராந்தியத்தில் தமிழர்களின் சுயநிர்ணயத்தை உறுதிப்படுத்துவோம். மேலும், ஒற்றையாட்சியின் கீழ் இருக்கும் ஸ்கொத்லாந்து போல் எமது பிராந்தியம் அபிவிருத்தி அடையும் என்று நாம் திடமாக நம்புகிறோம்.
6. அத்துடன் உரிய நேரத்தில் ஒரு யாப்புத் திருத்தம் மூலம் 13 ஆவது திருத்தத்தில் கொடுபட்ட பொலிஸ் அதிகாரத்தையும் மீளப் பெற்றெடுப்போம்.

எனவேதான் கப்பல் சின்னத்திற்கு உங்கள் பொன்னான வாக்குகளை அளிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.

(080)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 ஆம் திகதி நள்ளிரவுடன் தேர்தல் அலுவலகங்கள் அகற்றப்படும்

(கொழும்பு)

எதிர்வரும் 12ஆம் திகதி நள்ளிரவுடன் வேட்பாளர்கள் தங்களது தேர்தல் அலுவலகங்களை அகற்ற வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைத்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் நடவடிக்கைகளுக் காக வேட்பாளர்கள் தேர்தல் அலுவலகங்களை ஸ்தாபித்துள்ளனர். அவற்றில் வாக்களிப்பு நிலையங்களை அண்மித்து ஸ்தாபிக்கப்பட்டுள்ள அலுவலகங்கள் 12ஆம் திகதி நள்ளிரவுடன் நீக்கப்பட வேண்டும்.


அன்றைய தினத்துக்கு பின்னர் தேர்தல் தொகுதி ஒன்றில் பிரதான கட்சிகள் அல்லது சுயேட்சைக் குழுக்களுக்காக ஒரு அலுவலகத்தை மாத்திரம் வைத்திருக்க முடியும். அன்று முதல் வேட்பாளர்கள் தேர்தல் தொகுதிக்கென ஒரு அலுவலகத்தை மாத்திரம் வைத்திருப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதே போன்று வேட்பாளர்கள் தங்களது வீடுகளை தேர்தல் அலுவலகமாக பயன்படுத்த முடியும். எனினும் அவ்வாறான தேர்தல் அலுவலகங்களின் ஊடாக எந்தவித தேர்தல் பிரசார நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது.

அதேபோன்று வாக்களிப்பு நிலையத்திலிருந்து 500 மீற்றருக்குள் காணப்படும் சகல தேர்தல் அலுவலகங்களும் அகற்றப்பட வேண்டுமென தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். (நி-8)



ஊரெழு கலைவாணி முன்பள்ளியின் கலை விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் நேற்றுக்காலை சனசமூக நிலைய தலைவர் சி.இளங்கோ தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய ஓய்வு நிலை முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம் கலந்து கொண்டார்.


67 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்




வடக்கின் விடிவெள்ளியாய் என்றும் மக்கள் போற்றும் நாயகனாய் விளங்கும் மாண்புமிகு

கே.என். டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு

இனிய பிறந்த நாள் வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் நடக்கவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலிலும் அதிகபடியான வாக்குகளைப் பெற்று வெற்றிபெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

(2586)

வாழ்த்துவோர்-

யாழ்.பல்கலைக்கழக ஜனநாயக ஊழியர் சங்கம்



இனிய வாழ்வு இல்லம்
தேவிபுரம் "அ" பகுதி
புதுக்குடியிருப்பு
முல்லைத்தீவு

கட்புலன், செவிப்புலன், பேச்சுத்திறன் குன்றிய மாணவர்கள் கல்வி கற்பதற்கு விடுதி வசதிகளுடன் கூடிய விசேட பாடசாலை

பதிவு இலக்கம்: MSEW/NSPD/2/10/R-202

பதிவு இலக்கம்: MU/PKI/DS/VSSO/02

புதிய மாணவர் அனுமதி - 2025

கீழ்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடைய பிள்ளைகளின் பெற்றோர்கள் எதிர்வரும் 31.12.2024இற்குப் பிந்தாமல் மேற்குறிப்பிட்ட முகவரியுடன் தொடர்பு கொண்டு தங்களின் பிள்ளைகளின் வளமான எதிர்காலத்துக்கு வழிசமைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**இணைந்து கொள்ள விரும்பும் பிள்ளைகளுக்கு இருக்க வேண்டிய தகைமைகள்.**

01. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். நாட்டில் எப்பாகத்தில் வசிப்பவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

02. வயது எல்லை - 05 வயது பூர்த்தி செய்தவரும் 22 வயதிற்கு மேற்படாதவருமாக இருத்தல் வேண்டும். ஆண், பெண் இருபாலாரும் இணைத்துக் கொள்ளப்படுவர்.

03. குறிப்பிட்ட குறைபாடுகள் உள்ளவர்களாக இருத்தல் அவசியம். குறைபாடுகள் இருப்பது பற்றி சம்பந்தப்பட்ட வைத்திய நிபுணரால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

04. தமிழ் மொழி மூலமே கற்பித்தல் செயற்பாடுகள் இருப்பதால் தமிழ் மொழி அறிவு இருத்தல் வேண்டும்.

05 வட்டார கிராம சேவை அலுவலர், பிரதேச சமூக சேவை அலுவலரின் உறுதிப்படுத்தல் கடிதம் இருத்தல் வேண்டும்.

06. வேறு பாடசாலைகளில் இருந்துவிலகி வருபவர்களாயின் குறித்த பாடசாலையின் பாடசாலை விலகல் பத்திரம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

07. பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஒருவர் பிள்ளையின் நலன்களுக்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

பிள்ளைகளுக்கான உணவு, உடை, தங்குமிடம் மற்றும் கல்விக்கான அனைத்து வசதிகளும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும். மேலும் மேலதிக வகுப்புக்கள், கணினிக் கற்கைகள், கவின் கலை வகுப்புக்கள், ஆளுமை விருத்திக்கான செயற்பாடுகள், சுகாதார மருத்துவ வசதிகள், விளையாட்டு வசதிகள் என்பன இலவசமாக வழங்கப்படும். அத்துடன் கற்பித்தற் செயற்பாடுகள், பரீட்சைகள் அனைத்தும் அரச பாடசாலைகளின் கற்கைநெறிகளுக்கு அமைவாக இருக்கும். அரசினால் வழங்கப்படும் இலவச பாடநூல்கள், சீருடைகள் கிடைக்க ஏற்பாடுகள் உள்ளன.

இது தேசிய மட்டத்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும்.

தொடர்புகொள்ள வேண்டிய இலக்கங்கள்- அலுவலகம் :- 021 206 1949, 077 209 1949 (Whatsapp, Viber)

| | | | |
|---|---|---|---|
| சு.ரவீந்திரன், முகாமையாளர், ஓய்வு நிலை அதிபர், 076 766 6156 | மி.ஜேசு றெஜினோல்ட், தலைவர், பிரதம கணக்காளர், மாவட்ட செயலகம், வவுனியா. 077 652 9891 | பொ.பேரின்பநாயகம், செயலாளர், ஓய்வு நிலை வலயப் பிரதி கல்விப்பணிப்பாளர், 077 328 6757 | ச.திருச்செல்வம், பொருளாளர், ஓய்வுநிலை பிராந்திய முகாமையாளர், இலங்கை வங்கி. 077 775 2566 |

(520)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# வரிச்சலுகை வழங்கினால் கடனை அடைப்பது கடினம்

## பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தற்போதைய பொருளாதார நிலைமையின் அடிப்படையில் வரி குறைப்பு அல்லது வரிச்சலுகை வழங்கினால் 2028 ஆம் ஆண்டு மொத்த தேசிய உற்பத்தியில் 15% என்ற நிலைக்கு அரச வருவாயை கொண்டு வருவது கடினம் என பொருளாதார நிபுணர்கள் சுட்டிக் காட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த வருடம் முதல் வருமான வரி உள்ளிட்ட வரி வீதங்களை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கம் விடுத்துள்ள அறிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் அவர்கள் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள வெளிநாட்டு கடனுக்கான கடன் மற்றும் வட்டி தவணைகளை 2028 ஆம் ஆண்டு முதல் இலங்கை செலுத்த ஆரம்பிக்க வேண்டும்.

இவ்வாறானதொரு பின்னணியில் வரி வருவாய் மேலும் குறைந்தால் கடனை அடைப்பது சவாலாக இருக்கும் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்படி, சர்வதேச நாணய நிதியத்திற்கு இடையிலான ஒப்பந்தத்தின் அடிப்படையில் நாட்டின் அரச வருமானம் 2028 ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 15% ஆக அதிகரிக்கப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)

# ட்ரம்பை தொடர்ந்து இலங்கையை குறிவைத்த ஈரானிய உளவாளி

(வோஷிங்டன்)

அறுகம்பையில் மேற்கொள்ளப் படவிருந்தாக கூறப்படும் பயங்கரவாத தாக்குதல் திட்டத்துடன் தொடர்புடையவர் என சந்தேகிக்கப்படும் ஈரானிய பிரஜையொருவர் தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் போது டொனால்ட் ட்ரம்பை கொலை செய்வதற்கும், அவரை கண்காணிப்பதற்கும் நியமிக்கப்பட்டதாக பர்ஹாட் ஷகேரி என்ற ஈரானிய பிரஜைக்கு எதிராக அமெரிக்க நீதி திணைக்களம் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது. இந்தநிலையில், குறித்த ஈரானிய பிரஜை அறுகம்பை பகுதியில் இஸ்ரேலிய பிரஜைகளை இலக்கு வைத்து பாரிய துப்பாக்கிச்சூட்டுத் தாக்குதலை நடத்துவதற்கு ஈரானிய புரட்சிகர இராணுவத்தினரால் பணிக்கப்பட்டவர் எனவும் அமெரிக்க நீதித்திணைக்களம் குற்றஞ் சுமத்தியுள்ளது. (நி-8)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல் முறைப்பாடுகள் அதிகரிப்பு

(கொழும்பு) பொதுத்தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2,088 ஆக அதிகரித்துள்ளது.

தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 475 முறைப்பாடுகளும் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்து நிலையத்திற்கு 1, 613 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் 149 முறைப்பாடுகள் பதிவாகியுள்ள நிலையில் ஒரு வன்முறைச் சம்பவம் பதிவாகியுள்ளதாகவும் தேர்தல் ஆணைக் குழு தெரிவித்துள்ளது. (நி-8)


## விற்பனைக்கு

1. யாழ் நகரின் வர்த்தக மையப் பகுதியான ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரி வீதி முகப்புடன் 52 அடி அகலமும் 216 அடி நீளமும் கொண்ட ரட்ணம் பார்மசிக்கு அருகில் உள்ள காணி விற்பனைக்கு உண்டு.
2. யாழ் ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரி வீதி முகப்புடன் SVM களஞ்சியத்திற்கு அருகில் 60 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்ட 3 கடைகளும் விற்பனைக்கு உண்டு.
3. யாழ் பிறவுன் வீதியில் 2 பரப்புக் காணியும், 4 பரப்பில் அமைந்த புதிய 3 மாடி வீடும் விற்பனைக்கு உண்டு
4. யாழ் மின்சார நிலைய வீதியில் மூன்றாம் ஒழுங்கையில் 1 1/2 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு.
5. யாழ் மின்சார நிலைய வீதியில் முதலாம் ஒழுங்கையில் 1 1/2 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு.
6. யாழ் மின்சார நிலைய வீதியில் 16 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட மாடிக் கடையும் விற்பனைக்கு உண்டு.
7. யாழ் ஆஸ்பத்திரி வீதியில் 30 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்ட இரண்டு கடைகளும் விற்பனைக்கு உண்டு.
8. யாழ் கஸ்தூரியார் வீதியில் 16 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட மாடிக் கடையும் விற்பனைக்கு உண்டு.
9. யாழ் பலாலி வீதியில் பரமேஸ்வரா சந்திக்கு அண்மையில் 5 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு.
10. யாழ் மின்சார நிலைய வீதியில் மூன்றாம் ஒழுங்கையில் 2 1/2 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.
11. யாழ் பலாலி வீதியில் பரமேஸ்வரா சந்திக்கு அண்மையில் 4 பரப்பில் அமைந்த புதிய வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு: **077 723 2535** தர்மகுலசிங்கம்


## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 13, முஸ்லீம் கல்லூரிவீதி, ஆதன இல 217/16 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் அப்துல்காதர் பெண் எம்.எம்.பீ.பீ என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை முகைதீன் சகீப் சுல்தான் அப்துல்காதர் கைம்பெண் முகமட் உசன் பீபீ 21.08.1945 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு எஸ்.எம்.எம்.அபூபக்கர் முகதாவில் 4927ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் முகமட் நயினா முகமட் மற்றும் பெண் செயநம்பு நாச்சியா என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை தென்மேற்கு இறையில் முத்துமுகமட் செகு பரீட் மற்றும் பெண் பௌசான் அவர்கள் 01.10.2004ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு எம். எம். எம்.ரமீஸ் முகதாவில் 677ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் தங்களுக்கு சீதனமாக வழங்கப்பட்ட உறுதி தொலைந்து விட்டதாக வெளிப்படுத்தியுள்ளார்.

குறித்த ஆதனத்தை செகு பரீட் பௌசான், செகு பரீட் ரஜ்லீன், செகு பரீட் ரஸ்மீன், செகு பரீட் ராஜ்லியா, செகு பரீட் முகமட் ரலீன், செகு பரீட் சிகான் ஆகியோர் 08.08.2012 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு எம்.இமாம் முகதாவில் 1349ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் கௌரி தர்மராசா என்பவருக்கு வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவு யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட "கள்ளியடி" நிலப்பரப்பு 0 குளி 15.49 உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.சுப்பிரமணியம்அவர்களால் 11.02.2024ஆம் திகதி அளந்து வரைந்த 0377 இலக்க படத்தின்படி (நிலப்பரப்பு பூச்சியம் குளி பதினைந்து தசம் நான்கு ஒன்பது.) கட்டடமும் பயிர்வகைகளும்,

இதற்கு எல்லைகள்:-

கிழக்கு: பீடி ஒழுங்கை.
வடக்கு: யுனைட் மஸ்றூனின் மிகுதி ஆதனம்.
மேற்கு: ஒஸ்மானியா கல்லூரிக்குரிய ஆதனம்.
தெற்கு: எஸ்.யுனைத்தின் ஆதனம்.

இதடங்கலும்

தற்போது இவ்வாதனத்தை கௌரி தர்மராசா என்பவர் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது கௌரி தர்மராசா என்பவர் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-845)

## கண்ணீர் அஞ்சலி



மண்ணில் 09 . 06 . 1968
விண்ணில் 08 . 11 . 2024

அளவெட்டி கிழக்கு, கும்பலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர்.இராசு இரவீந்திரன்**

எமது சங்கத்தின் அங்கத்தவரான அமரர். இராசு இரவீந்திரன் 08.11.2024 ஆம் திகதி அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் குடும்பத்தினருக்கும் உற்றார் உறவினர்களுக்கும் எமது சங்கத்தின் அங்கத்தவர்கள்,பணிப்பாளர்கள் பணியாளர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (சி-550)

பிரிவால் துயருறும்: அங்கத்தவர்கள்,பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
சுன்னாகம்.ப.தெ.வ.அ.கூ.சங்கம். (மின்சார நிலைய வீதி, சுன்னாகம்)


### மணமகன் தேவை

1982, இந்து, கார்த்திகை, ASST. MANAGER
பூர்வீகம் - யாழ்ப்பாணம், வதியுமிடம் - வவுனியா
மணமகன் பதிவு இல: 11162.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை. அழையுங்கள் 076 664 9401
11.11 Festival Offer 12 Nov 2024 வரை
(30% Off, No Broker Commission,
Daily Deals & Bundle offer).
www.EQMarriageService.com (2484)

### மணமகன் தேவை

1997, இந்து, அனுசம், PROJECT MANAGER
பூர்வீகம் - காங்கேசன்துறை, வதியுமிடம் - SWISS
மணமகள் பதிவு இல: 11173.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை. அழையுங்கள் 076 664 9401
11.11 Festival Offer 12 Nov 2024 வரை
(30% Off, No Broker Commission,
Daily Deals & Bundle offer).
www.EQMarriageService.com (2484)

### மணமகன் தேவை

1996, இந்து, ஆயிலியம், ENGINEER
பூர்வீகம் - யாழ்ப்பாணம், வதியுமிடம் - SWISS
மணமகன் பதிவு இல: 11183.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை. அழையுங்கள் 076 664 9401
11.11 Festival Offer 12 Nov 2024 வரை
(30% Off, No Broker Commission,
Daily Deals & Bundle offer).
www.EQMarriageService.com (2484)

### மணமகன் தேவை

1998, இந்து, பூசம், HR EXECUTIVE OFFICER
பூர்வீகம் - யாழ்ப்பாணம், வதியுமிடம் - வத்தளை
மணமகள் பதிவு இல: 11194.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை. அழையுங்கள் 076 664 9401
11.11 Festival Offer 12 Nov 2024 வரை
(30% Off, No Broker Commission,
Daily Deals & Bundle offer).
www.EQMarriageService.com (2484)


## குடும்ப புனர்வாழ்வு நிலையம் (FRC) வெற்றிடம்

இது 1992 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. FRCயானது ஒரு முன்னணி இலாப நோக்கமற்ற, பிரிவற்ற ஒரு நிறுவனம். உயிர்பிழைத்தவர்கள் மற்றும் மன அழுத்தத்தை அனுபவித்த இலங்கையர்களின் உடனடி குடும்ப உறுப்பினர்களுக்கு உளவியல், சமூக ஆரோக்கியத்திற்கு அதிக முன்னுரிமை அளிக்கப்பட்டு முழுமையான புனர்வாழ்வு சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ளது.

**பதவி : பொதுத்திட்ட ஒருங்கிணைப்பாளர் - வடக்கு (யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டது)**

**முக்கிய பொறுப்புகள் :**

திட்டத்தை செயற்படுத்துவதும் ஒருங்கிணைப்பதும் மேற்பார்வை செய்தல், செயற்பாட்டுத் திட்டங்கள், பங்குதாரர்களுடனான பிணையம் மற்றும் பல்வேறு மன்றங்களில் FRCயைப் பிரதிநிதித்துவப்படுத்துதல் ஆகியவற்றின் படி பல மாவட்டங்களில் திட்டங்களைச் செயற்படுத்துவதும் ஒருங்கிணைப்பதும் மேற்பார்வை செய்தல் மற்றும் FRC நிர்வாக மற்றும் கொள்முதல் நடைமுறைகளை பிராந்திய ஊழியர்களை திறம்பட நிர்வகித்தல் மற்றும் திட்டமுன்னேற்றம் குறித்த விபரிப்பு அறிக்கைகளை தலைமையகத்துக்கு சமர்ப்பித்தல்

**தகுதி திறன் மற்றும் சேவை அனுபவம் :**

- இளமானி பட்டம் உளவியல், சமூகவியல் அல்லது அது தொடர்பான துறைகளில்
- சமூகம் மேம்பாட்டு, பங்குதாரர் வலையமைப்பு, பொதுப் பேச்சு மற்றும் மன்றத்தில் பிரதிநிதித்துவம் போன்ற அதே நிலையில் உள்ள NGOவில் குறைந்தபட்சம் மூன்று வருட அனுபவம்
- ஆங்கிலம் மற்றும் தமிழில் சிறந்த தேர்ச்சி, சிங்கள அறிவு மேலதிக தகைமையாகக் கணக்கிடப்படும்
- அநுராதபுரம், மட்டக்களப்பு மற்றும் வட மாகாணத்தில் கூடுதலாக பயணிக்க விருப்பம் கொண்டிருத்தல்.
- மைக்ரோசாப்ட் (Microsoft) பெக்கேஜில் வேலை செய்யும் திறமை இருக்க வேண்டும்

**தகுதி மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் ஊதியம் நிர்ணயிக்கப்படும்**


உங்கள் விண்ணப்பத்தை மின்னஞ்சல் மூலமாகவும் (மின்னஞ்சல் தலைப்பில் குறிப்பிட்ட பதவி நிலையுடன்) மற்றும் இரண்டு பரிந்துரைப்பாளர்கள் (உறவினரல்லாத) குறிப்பிட்டு manager.pro@frcsl.org என்ற முகவரிக்கு அல்லது பதிவுத் தபால் மூலம் இந்த விளம்பரம் வெளியிட்டு 10 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்

**The Executive Director**
**FAMILY REHABILITATION CENTRE**
**No. 296/14, Park Road, Colombo 5**

(சி-1549)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊஞ்சல் சின்னம்



X 4

சுயேச்சைக் குழு - 2

நேர்மையான வினைத்திறன்மிக்க அரசியலுக்கு!
இளைஞர்களின் வருகையை ஆதரிப்போம்!



## E.S.P. நாகரத்தினம்
# கமலநுபன்

சட்டத்தரணி, இளம் தொழில் முயற்சியாளர்
LL.B (Hons), BA (Economics) (University of Colombo)

**"எமது இரண்டு வருட கால செயல்திட்ட முன்னேற்றங்களையும், 2030 மற்றும் 2050 ஆண்டுகளை நோக்கிய செயல்திட்ட முன்மொழிவுகளையும் 2026ஆம் ஆண்டு பொது மாநாட்டில் வெளியீடல்!"**

### அரசியல் தலைமைத்துவ கட்டமைப்பும் அரசியல் தீர்வும்

- அரசியலில் ஆர்வமும். அக்கறையும். இனப்பற்றும். தேசப்பற்றும் மிகுந்த இளைஞர்கள் மற்றும் யுவதிகளையும். ஆளுமை மிக்கவர்களையும் தேர்தல் அரசியலுக்குள் உள்வாங்குதல்.
- தமிழ் மக்கள் வரலாற்று ரீதியாக ஆண்டாண்டு காலமாக வாழ்ந்து வருகின்ற இலங்கையின் வடக்கு. கிழக்கை உள்ளடக்கிய தமிழ்த்தேசிய பரப்பான சுயத்திலும். இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் (உ-ம்: கொழும்பு) மற்றும் உலகெங்கும் புலம்பெயர்ந்து வாழ்கின்ற எம்மக்களை ஒன்றிணைத்து ஓர் பலமான அரசியல் கட்டமைப்பை உருவாக்கல்.
- வடக்கு கிழக்கில் சுயாட்சி அரசியலை மேற்கொள்ள ஓர் கட்டமைப்பை உருவாக்குவதுடன் அதனை நடைமுறைப்படுத்த ஓர் புதிய அரசியல் அமைப்பு நோக்கிய நகர்வு.
- தமிழர் பரப்பில் 1948ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை இனப்பரம்பலை மாற்றியமைக்கும் நோக்கோடு மேற்கொள்ளப்பட்ட குடியேற்றங்கள் தொடர்பான புள்ளிவிபரங்களை திரட்டுதலும் அவ்வாறான செயற்பாட்டை எதிர்காலத்தில் இல்லாதொழித்தலும்.
- தமிழர் பரப்பில் பேரினவாத அரசாங்க செயற்பாட்டினால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளினது விடுவிப்பு. சிறைகளில் வாடும் அரசியல் கைதிகளினது விடுதலை மற்றும் இனப்படுகொலை தொடர்பான பொறுப்புக்கூறுதல் அத்துடன் ஏனைய அடக்குமுறைகளுக்கு எதிராக செயற்படல்.

### முயற்சியாண்மை

- அரசியல் தீர்வு எட்டும் வரை நம் சமூகத்தினது பொருளாதார மேம்பாட்டு விடயங்களை கையாளக்கூடிய நிபுணத்துவ குழாமை மாவட்ட ரீதியாக கட்டமைத்தல். அக்குழு உள்நாட்டு. வெளிநாட்டு முதலீடுகளை வடக்கு. கிழக்கை நோக்கி வரவழைக்கவும். அதனூடாக பொருளாதார நிலைபேறான அபிவிருத்தி (Economic Sustainable Development) அடையும் வழி வகைகளை உருவாக்கி. நடைமுறைப்படுத்தி. கண்காணித்தல்.
- தமிழர் பரப்பின் பொருளாதார துறைகளை முயற்சியாண்மை ஊடாக நவீனமயப்படுத்தி வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல்.
- நேரடி முதலீட்டு சூழலை ஊக்குவிப்பதற்கு பாதுகாப்பு உத்தரவாத ஏற்பாடுகள்.

### கல்வி

- ஆரம்பக்கல்வி. பாடசாலை. பல்கலைக்கழகம். தொழில்சார் கற்கை நெறிகள். வாழ்வியல் கற்கை நெறிகள் ஆகியவற்றை தரமுயர்த்துதல்.
- கிராமங்களிலிருந்து கல்வி நடவடிக்கைகளுக்காக நகரங்களை நோக்கி செல்வதை தடுக்கும் முகமாக கிராம மட்டங்களில் கல்வி கற்றல் செயற்பாட்டை மேம்படுத்தல்.
- எமது மாணவர்களின் பல ஆண்டு கால கற்கைகள் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற ஆய்வுக்கட்டுரைகளை ஆராய்ந்து அவற்றிற்கு உயிர்ப்பூட்டல்.

### விளையாட்டு

- வணிக ரீதியான கழக போட்டிகள் மூலம் விளையாட்டு வீரர்களை பொருளாதார ரீதியாக தரமுயர்த்துதல் மற்றும் பொழுதுபோக்கு ரீதியான போட்டிகள் மூலம் மக்களை வாழ்வியல் ரீதியாக வளப்படுத்தல்.
- விளையாட்டு மைதானங்களை மேம்படுத்துதல். விளையாட்டு கழக செயற்பாடுகளை ஊக்குவித்தல். மற்றும் விளையாட்டு போட்டிகள் மூலம் சமூக மேம்பாட்டை நிலைநாட்டல்.
- பாரம்பரிய விளையாட்டுக்களை நடாத்துவதன் மூலம் எமது தமிழர் கலாசாரத்தை தக்க வைத்தல்.

### கலை – கலாசாரம்

- தமிழர் பரப்பில் அருகிச்செல்லும் கலைகளை அழியவிடாது பாதுகாக்கும் ஆதரவுத்தளம் என்பது மிகக் குறைவாகவே உள்ளது. அதன் அடிப்படையில் கலைச்செயற்பாடுகளை தொடர்ந்தும் நிகழ்த்துதல். புத்தாக்க செயற்பாடுகள். மீளுருவாக்கச் செயற்பாடுகள் என்ற அடிப்படையில் கட்டமைத்தல்.
- தமிழர் விழுமியங்களை பறைசாற்றும் வகையில் ஓர் உயர்வான எமது கலாசார விழுமியங்களை அடுத்த சந்ததிக்கு எடுந்துச்செல்லல்.

### அறிவோம் – ஆழ்வோம் செயல்திட்டம்

அரசியல் ரீதியாக அரசியல் தலைமைத்துவ கட்டமைப்பும் அரசியல் தீர்வும். பொருளாதார ரீதியாக முயற்சியாண்மை. கல்வி. விளையாட்டு. கலை-கலாசாரம் என்பவற்றை உள்ளடக்கி ஓர் மேம்பாட்டினை அடையும் பொருட்டு விழிப்புணர்வு பட்டறைகள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் மூலம் அரசியல் மற்றும் பொருளாதாரத்தை மக்கள் மயமாக்கல்!

## இரண்டு ஆண்டு கால செயல்திட்டம்

- எமது தமிழர் பரப்பான சுயத்திலும், புலத்திலும் பலமான கட்டமைப்பினை உருவாக்குதல்.
- யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில், எவ்வித கட்சி வேறுபாடுகளின்றி, ஒருமித்த நிலைப்பாட்டை ஏற்படுத்தி, அரசியல் தீர்வு மற்றும் பொருளாதார மேம்பாடு தொடர்பான பொதுத்தீர்மானத்தை நிறைவேற்றுதல்.
- இளைஞர் வேலைவாய்ப்புத்திட்டம்.
- அறிவோம் ஆழ்வோம் செயல்திட்டம்.
- போக்குவரத்து மேம்பாட்டுத்திட்டம்.

## 2030ஆம் ஆண்டை நோக்கிய செயல்திட்டம்

- தமிழர் தரப்பில் பலமான கட்டமைப்பை உருவாக்கி நிலையான நீடித்த அரசியல் தீர்வு முன்னெடுப்புக்கள்.
- விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் மற்றும் சேவைத்துறையில் தன்னிறைவான பொருளாதார மேம்பாட்டுடன் கூடிய செயல்திட்ட முன்மொழிவுகள்.
- 2050ஆம் ஆண்டை நோக்கிய கிராமங்களின் எழுச்சியையும் நகரத்தை நவீனமயப்படுத்துவதற்கான செயல்திட்ட முன்மொழிவுகள்.

## 2050ஆம் ஆண்டை நோக்கிய செயல்திட்டம்

- விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் மற்றும் சேவைத்துறையில் தன்னிறைவடைதல்.
- இளைஞர்களின் இருப்பை பலப்படுத்தி ஒரு சமூக, பொருளாதார கட்டமைப்பை உருவாக்குதல்.
- வளமான அமைதியான தேசம் என்ற உயர்நிலையை எட்டுதல்.

(சி-167)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 10 அம்ச கொள் திட்டங்

## அங்கஜன் இராமநாதனின், மக்களின் வெற்றிக்கான செயற்திட்டங்கள்

### 1 அரசியல் தீர்விற்கான ஆணித்தரமான அழுத்தம்

- இருப்பைத் தக்கவைத்தல்
- சுயாட்சி அதிகாரம் மற்றும் சுய உரிமை ஆட்சிப்பொறிமுறை
- மீள் கட்டுமானம், காணி விடுவிப்பு மற்றும் மீள்குடியேற்றம்
- அரசியல் யாப்பு சீர்திருத்தம்
- முன்னாள் போராளிகள் மறுவாழ்வு
- பாதிக்கப்பட்டோருக்கான சொத்திழப்பீடு

### 2 மீண்டும் கல்வியில் முதலிடம்

- இலவச ஆரம்பநிலை தொழில்நுட்பக்கல்வி
- நிலைபேண்தகு அபிவிருத்தி கற்றல்-கற்பித்தல் முறைகள்
- பல்கலைக்கழக - தொழில்நிறுவன இணைப்பு
- கல்விசார் பௌதீக மற்றும் மனிதவள இடைவெளி நிரப்பல்
- திறன்விருத்தி சார் தொழிற்கல்வி
- பாடசாலைகளுக்கிடையே சமவளப்பங்கீடு

### 3 துரித பொருளாதார வளர்ச்சி

- உள்ளூர் உற்பத்திகளை வலுப்படுத்த உற்பத்திக் கிராமங்கள்
- பேண்தகு பொருளாதாரம்
- இயங்கா தொழிற்சாலைகளை மீண்டும் இயங்க வைத்தல்
- புதிய தொழிற்சாலைகள் அமைத்தல்
- சுற்றுலாத்துறை வணிகம்
- ஏற்றுமதிப் பொருளாதார முன்னுரிமை
- சிறிய மற்றும் நடுத்தர வியாபாரங்களை வலுவூட்டல்
- திறன்வளம் கொண்ட தொழில் வல்லுநர்கள் உருவாக்கம்

### 4 விவசாயம், மீன்பிடி, கால்நடைத்துறைகளில் துரித மீளெழுச்சி

- உணவுத்தேவையில் தன்னிறைவு
- பேண்தகு விவசாயம்
- விவசாய நவீனமயமாக்கல்
- பேண்தகு மீன்பிடி
- கால்நடை பொருளாதார மேம்பாடு
- விவசாய, கால்நடை வளர்ப்புசார் தொழில்முனைவோர்
- பெறுமதிசேர் உற்பத்திகளின் அறிமுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச

ள்கைத்

ங்கள்

ன

யாழ்

# இருப்பியல்

வையத் தலைமை கொள்

# தபால்பெட்டி

## சின்னத்திற்கு வாக்களிப்பீர்

ප්‍රජාතන්ත්‍රවාදී ජාතික සන්ධානය

ஜனநாயக தேசிய கூட்டணி

Democratic National Alliance

X 1

## 5

### மொழி, கலை, கலாச்சார, பண்பாட்டு, இலக்கியப் புத்தாக்கம்

- கலைத்துறைகளின் ஊக்குவிப்பு மற்றும் கலைஞர்களுக்கு ஆதரவு
- தமிழ்மொழிக்கான அங்கீகாரம்
- பாரம்பரிய கலைகள் மற்றும் கலாச்சார மரபுகளை கற்றுத்தரும் மையங்கள்
- தமிழ்ப் பண்பாட்டுக் கலைகள் மற்றும் இலக்கியங்களை டிஜிட்டல் வடிவில் ஆவணப்படுத்தல்
- வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் திட்டங்கள், சிறு நூலகங்கள்
- தமிழ்ப் பண்பாட்டு மரபுரிமைகள் மற்றும் தொல்பொருட் சின்னங்களைப் பாதுகாத்தல்
- பிரதேச ரீதியில் கலை இலக்கிய வட்டங்களின் விருத்தி
- தமிழ் பண்பாட்டுத் திருவிழாக்கள் மற்றும் புத்தகக் கண்காட்சிகள்

## 6

### அனைத்து தமிழ் உறவுகளையும் ஒரே புள்ளியில் இணைத்தல்

- புலம்பெயர் சமூக முதலீடுகள்
- வணிக கூட்டணிகள் மற்றும் வணிக முனைப்பாளர்களுக்கான ஆலோசனை மற்றும் ஆதரவுத்திட்டங்கள்
- தமிழ் பேசும் துறைசார்ந்த நிபுணர்களுக்கான வலையமைப்பு
- கல்வி மற்றும் வணிக அறிவுப்பரிமாற்றம்
- மக்களின் தேவைகளை முன்னிலைப்படுத்தும் “விடியலின் திசை” தளம்

## 7

### உடல், உள நலன் மிக்க ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கல்

- சேதன உணவுப்பயன்பாடு
- நோய்க்கண்காணிப்பு
- மனநலம் மற்றும் உளவியல் நலனுக்கான வழிகாட்டல் மற்றும் வேலைத்திட்டம்
- சுற்றுச்சூழல் சுகாதார பராமரிப்பு
- இளைஞர்களுக்கான விளையாட்டுத் திட்டங்கள்

## 8

### தொழில்நுட்பத்தை மையப்படுத்திய சமூகமொன்றை கட்டியெழுப்புதல்

- தொழில்நுட்பம் சார் கல்வி மற்றும் வல்லுநர்கள்
- உள்ளூர் தொழில்நுட்ப நிறுவன ஊக்குவிப்பு
- தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி மேம்பாடு
- கல்வி மற்றும் தொழில்நுட்ப இணைப்பு
- டிஜிட்டல் பயன்பாடு - சேவைகள், கட்டணம், தரவுத்தளம்
- டிஜிட்டல் பாதுகாப்பு மற்றும் டிஜிட்டல் குற்றச்செயல்கள் தொடர்பான விழிப்புணர்வு

## 9

### அறிவுபூர்வமான, சக்திமிக்க மகளிர், இளைஞர்களின் எதிர்காலம்

- இளம் தொழில்முனைவோருக்கான ஊக்குவிப்பு மற்றும் கடன்வசதி
- மகளிர் வலுவூட்டல்
- பாலியல், சிறுவர் துஷ்பிரயோகத்திற்கெதிரான நடவடிக்கைகள் மற்றும் விழிப்புணர்வு
- பாலின சமத்துவம் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைக்கெதிரான நிகழ்ச்சித்திட்டம்
- போதையற்ற சமூகம்
- விளையாட்டில் முதலிடம்
- கைத்தொழில் வளர்ச்சித்திட்டங்கள்
- முதலீட்டாளர் கருத்துக்களம் (Investor Forum )

## 10

### இயற்கை, பௌதீக, ஆளணி வளங்களை மேம்படுத்தல்

- அனைவருக்கும் வீடு, குடிநீர், மின்சாரம், கழிப்பறை வசதி
- சகலருக்கும் பொதுவான அபிவிருத்தி
- அனர்த்த முகாமைத்துவத்தை மேம்படுத்தல்
- சக்தி வளங்களின் திறனான பயன்பாடு
- மேம்பட்ட வடிகால் அமைப்பு மற்றும் திண்மக்கழிவு முகாமைத்துவத்துடன் இணைந்த பேண்தகு சூழல் முகாமைத்துவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்பயிற்சி கற்கைநெறிகளுக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது 2025 ஆம் ஆண்டு முதலாம் அரையாண்டிற்கான முழுநேர கற்கைநெறிகள் 01.01.2025 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

இக்கற்கைநெறிகள் யாழ்ப்பாணம், கைதடி, காரைநகர், வல்வெட்டித்துறை, பண்டத்தரிப்பு, சுன்னாகம் போன்ற தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெறவுள்ளன.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், மின்னிணைப்பாளர், கணிய அளவையியலாளர், விருந்தினர் வரவேற்பாளர், வெதுப்பாளர், சமையலாளர், நீர்க்குழாய் பொருத்துநர், மோட்டார் சைக்கிள் திருத்துநர், அலுமினியம் பொருத்துநர், கணனி வன்பொருள் திருத்துநர், கணனி பட வடிவமைப்பாளர், அறை பராமரிப்பாளர், உணவு மற்றும் குளிர்பானம் பரிமாறுபவர், குழந்தை பராமரிப்பாளர், பெண்கள், சிறுவர்களிற்கான ஆடை வடிவமைப்பாளர், சிகையலங்கரிப்பாளர், அழகுக்கலை வல்லுநர், முன்பள்ளி ஆசிரியர், விரைவு சேவை உணவு வழங்குநர், பெற்றோல் மற்றும் டீசல் வாகன இயந்திர திருத்துநர் போன்ற கற்கைநெறிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இக்கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை மட்டம்-4 (NVQ-4) சான்றிதழுக்கான பயிற்சிநெறிகளாகும். கற்கவிரும்புவோர் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 22.11.2024 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட அலுவலகம் 4 ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம், இல 12 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம் அல்லது அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் மேற்கொள்ள முடியும். மேலதிக விபரங்களினை பெற்றுக்கொள்வதற்கு 021 222 7949, 071 031 8737, 077 613 9307 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என யாழ். இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (நி-8)

# அனுமதியின்றி மரக்களஞ்சியம் நடத்தியவர் கைது

## பெருந்தொகை மரத்துண்டுகளும் மீட்பு



(மன்னார்)

சிலாவத்துறை பொலிஸ் பிரிவில் உள்ள கஜிவத்தை காட்டுப்பகுதியில் அனுமதியின்றி மரக்களஞ்சியம் ஒன்றை நடத்தி குறித்த களஞ்சியத்தில் மரக்குற்றிகளை சேமித்து வைத்திருந்த அதிகாரி ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதோடு குறித்த களஞ்சியசாலையில் இருந்து பெருந்தொகையான மரத்துண்டுகளும் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் கடந்த வியாழக்கிழமை மாலை இடம் பெற்றுள்ளது.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.ஏ.எஸ். சந்திரபாலவின் பணிப்புரையின் கீழ் மன்னார் மாவட்ட குற்றப் புலனாய்வு பிரிவின் அதிகாரிகளால் குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது தேக்கு, முதிரை, பாலை போன்ற பல்வேறு வகை மரங்களில் வெட்டப்பட்ட பல இலட்சம் ரூபாய் பெறுமதியான சுமார் 1820 மரத்துண்டுகள் கைப்பற்றப்பட்டன.

மேலதிக விசாரணைகளை சிலாபத்துறை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-8-285)


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 08.10.2024 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

அமரர்.

**சற்குணானந்தஸ்ரீஸ்கந்தராஜா மீராதேவி**



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 10.11.2024 இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதுடன் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)**

போட்டோஸ்ரீ K.K.S வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(C-1551)

தகவல்:
குடும்பத்தினர்
076 688 9993



# வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களை பதிவு செய்தல்-2025

## கரைச்சி பிரதேச சபை-கிளிநொச்சி

2025ஆம் ஆண்டு சபைக்கு பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் பொருட்டு பதிவு செய்து கொள்வதற்கு விரும்பும் தகைமைவாய்ந்த வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொகுதி (A) | பொருட்கள் |
|---|---|
| A-01 | காகிதாதி எழுதுபொருள் |
| A-02 | அலுவலக உபகரணங்கள் (தளபாடம்) |
| A-03 | சித்த மருத்துவ மருந்துகள் |
| A-04 | நூலக நூல்கள் |
| A-05 | துணி வகை |
| A-06 | கட்டடப் பொருட்கள் |
| A-07 | கல், மணல் |
| A-08 | தீந்தை வகை |
| A-09 | நீர்க்குழாய் |
| A-10 | வாகன உதிரிப்பாகங்கள் |
| A-11 | மின் வழங்கு பொருட்கள், மின் பாவனைப் பொருட்கள் |
| A-12 | எரிபொருட்கள் உராய்வு நீக்கி |
| A-13 | இரும்பு பொருட்கள் |
| A-14 | தீராந்திகள், பலகைகள், சட்டங்கள் |
| A-15 | பனைமரங்கள், சலாகைகள் |
| A-16 | வாகனங்களுக்கான ரயர், ரியூப் மற்றும் மின்கலம் |
| A-17 | கணனி, அச்சுப்பொறி,பிரதியாக்கல் இயந்திரம், தொலைநகல், Antivirus,செருகி மற்றும் இவற்றிற்கான உதிரிப்பாகம் |
| A-18 | சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் கிருமிநாசினிகள் |
| A-19 | பாதணிகள், தோல் பொருட்கள் மற்றும் கிருமிநாசினிகள் |
| A-20 | அலங்காரப்பொருட்கள் |
| A-21 | இலத்திரனியல் பொருட்கள் |
| A-22 | மரக்கன்றுகள் (பழுங்கள், நிழல்தரும் மரங்கள், பூங்கன்றுகள் முதலியன) |
| A-23 | சிற்றுண்டி மற்றும் உணவு வகைகள் |
| A-24 | கழிவகற்றும் கூடைகள் |

| தொகுதி (B) | பொருட்கள் |
|---|---|
| B-01 | அச்சிடுதல், பதாதைகள் அமைத்தல் ,ஸ்ரிக்கர் அச்சிடுதல், நூல் கட்டுதல் |
| B-02 | மோட்டார் வாகனங்கள், உழவு இயந்திரங்கள் திருத்தல் |
| B-03 | வாகனங்களுக்குரிய ரியூப் ஒட்டுதல், ரயர் மாற்றுதல் |
| B-04 | ஒட்டு வேலைகள், உலோக வேலைகள் |
| B-05 | கனரக வாகனங்களின் சேவை, வாடகைக்கு விடுதல் |
| B-06 | மின்சாரத்திருத்தம் |
| B-07 | இலத்திரனியல் சாதனத்திருத்தம் |
| B-08 | வாகனங்கள் சுத்திகரிப்பு |
| B-09 | கோலவுடை தைத்தல் |
| B-10 | கணனி,பிரதியாக்கல் இயந்திரம் திருத்தம், சுத்திகரிப்பு |
| B-11 | இறப்பர் முத்திரை தயாரித்தல் |
| B-12 | வீதி விளக்குகள் பொருத்துதல் |
| B-13 | மயானங்களில் இறந்த உடல்களை எரியூட்டுதல் |
| B-14 | வீதி, கட்டடம் புனரமைப்பு, நிர்மான வேலைகள் |
| B-15 | கழிவகற்றல் சேவை (Gully Emptier Service) |

| தொகுதி (C) | ஒப்பந்த வேலைகள் |
|---|---|
| C-01 | குழாய்க்கிணறு அமைத்தல் |
| C-02 | வீதி நிர்மாணமும் திருத்தமும் |
| C-03 | கட்டட நிர்மாணமும் திருத்தமும் |

பதிவானது ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். படிவங்களை சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக்கட்டணமாக ரூபா 1,000 (வரி நீங்கலாக) அறவிடப்படும்.

விண்ணப்பத்தின் கடித உறையின் இடதுபக்க மேல் முலையில் **“வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் 2025”** எனக்குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் **“செயலாளர், தலைமை அலுவலகம், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி.”** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பபடிவங்கள் 2024.12.15 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.மேலதிக விபரங்களுக்கு 021-228 5761 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

**செயலாளர்,**
**கரைச்சி பிரதேச சபை,**
**கிளிநொச்சி.**

(சி-1548)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராளுமன்றத் தேர்தல் - 2024

### யாழ். கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

பொன்னை பொருளை பெறு நற் புத்திரனை தன் தமிழுக்காய் ஈந்த தலைவர் தர்மலிங்கத்தின் புதல்வன்


# சித்தார்த்தன்



- கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியின் உருவாக்கத்திற்காக தனது குடும்ப சொத்தை (226 பரப்பு) 100 கோடி பெறுமதி கொண்ட நிலத்தை நன்கொடையாக வழங்கியவர்.
- கல்வியே கண்ணெனக் கொண்டு பாடசாலைகள் அற்ற பிரதேசத்தில் அறிவுப் பசியினை போக்க தன் கிராமமான கந்தரோடையில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை ஆகிய பாடசாலைகள் உருவாக்குவதற்கு தமது சொத்தின் பெரும்பகுதியை வழங்கி பல்லாயிரக் கணக்கானோர்களின் அறிவுப் பசியை தீர்த்தவர்கள்.

**என்றும் எம் தமிழ் இனத்திற்காய் தன்னை ஈந்த பெருந்தகையை ஆதரிப்போம்**

X 5



தமது சொந்த நிலத்தில் யாழ்ப்பாணத்தில் பெரியவர்கள். சிறியவர்கள் இளைப்பாறி மகிழ சுப்பிரமணியம் பூங்காவினை உருவாக்கியவரின் வழித்தோன்றல் சித்தார்த்தனே...

**ஒற்றுமைக்காய் ஒன்றிணைந்து...**
**எம் மக்களுக்காய் சேவை செய்யும்**
**எம்மவர்களை ஆதரிப்போம்**

5 6

**பாலச்சந்திரன் கஜதீபன்**


(073)



உங்களுக்காக உங்களுடன் நானும் ஒருவனாய்...

# சிறந்ததோர் எதிர்காலத்தை நோக்கி...

ஒரு நல்ல மாற்றத்தைக் கொண்டு வர இதுவே ஒரு நல்ல சந்தர்ப்பம்



- **அரசியல் அபிலாஷை**

  எமது உரிமைகளையும் அடையாளத்தையும் பாதுகாக்கும் சிறந்த நல்லிணக்கச் செயற்பாடுகளை மேற்கொள்வதுடன் பாதிக்கப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் தேவைகளை சரிசெய்ய முயல்வேன்

- **பொருளாதார அபிலாஷை**

  கல்வி, வேலை மற்றும் விலைவாசி போன்ற அடிப்படை தேவைகளின் பொருளாதாரப் பிரச்சனைகளை சரிசெய்யும் நடவடிக்கைகளை செயற்படுத்துவேன்

- **ஒருங்கிணைந்த அரசியலுக்கான அபிலாஷை**

  வட- கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்கள் யாவரையும் ஒன்றிணைத்துச் செல்லக்கூடிய ஓர் புதிய அரசியல் கலாச்சாரத்தை முன்னெடுப்பேன்

அரசியல், சமூக மற்றும் பொருளாதார விடியலை நோக்கி ...

6

சந்திரகாசன்
**இளங்கோவன்**
இலங்கைத் தமிழரசுக் கட்சி

(016)



# " ஒரு வாக்கு, மாற்றம்

உங்கள் வாக்கு புதிய யுகத்தின் முதற்படி!"

அ.கிருபாகரன்
அ.கிருபாகரன்
அ.கிருபாகரன்



# அ.கிருபாகரன்

[ கிருபா லேணர்ஸ் உரிமையாளர் ]

X 2

(சி-166)

பாராளுமன்ற தேர்தல் - 2024



## பாராளுமன்றத் தேர்தல் - 2024

### யாழ்ப்பாணம் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்



தேசத்தின் மீட்புக்காய்
தேசியத் தலைவரின் வழிநின்ற
போராளிகளுக்கான அரசியல்
அங்கீகாரம்...

உங்கள் வாக்கு போராளி
**சிவநாதன் நவீந்திரா**
[வேந்தன்] இற்கு
ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி

X 9

(சி-174)

தாயகம்... தேசியம்... சுயநிர்ணயம்...



## பாராளுமன்றத் தேர்தல் - 2024

யாழ்ப்பாணம், கிளிநொச்சி
தேர்தல் மாவட்டம்

**பொங்குதமிழ் நாயகன்**

# இம்மானுவல் ஆனல்ட்

2

(சி-176)



இலங்கை தமிழரசுக்கட்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு பாரதம்

## கொத்தாக இறக்கும் பறவைகள்; 520 பறவைகள் இதுவரை இறப்பு



(டில்லி)

ராஜஸ்தானின் ஜெய்ப்பூர் மாவட்டத்தில் சாம்பார் ஏரியில் கடந்த மாதம் 26 ஆம் திகதியில் இருந்து பறவைகள் கூட்டம் கூட்டமாக இறந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 520 பறவைகள் செத்து மடிந்துள்ளன. இது மாநிலத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இது குறித்து நடந்த ஆய்வில், ஒருவித பக்றீரியாவால் பறவைகள் பாதிக்கப்பட்டு இருப்பது கண்டறியப்பட்டது. கிளோஸ்ட்ரிடியம் போட்லினம் என்ற அந்த பக்றீரியா தாக்கிய பறவைகளின் இறகு மற்றும் கால்கள் செயலிழந்து உயிரிழந்து வருகின்றன.

நோய் வாய்ப்பட்டுள்ள பறவைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதுடன் பக்றீரியா தடுப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதாக சமூக ஆர்வலர்கள் தெரிவித்து உள்ளனர். (நி-8)

## பாகிஸ்தான் ரயில் நிலையத்தில் குண்டு வெடிப்பு!


- 21 பேர் உயிரிழப்பு
- 30 பேர் படுகாயம்

(இஸ்லாமாபாத்)

**பாகிஸ்தானில் உள்ள குவெட்டா ரயில் நிலையத்தில் நேற்று காலை குண்டு வெடிப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது. இதில் சுமார் 21 பேர் உயிரிழந்துள்ளதோடு 30 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.**

ரயில் ஒன்று நடைமேடைக்கு வருவதற்கு சற்று முன்னதாக நடைபாதையில் குண்டு வெடித்துள்ளதாக முதற்கட்ட தகவலில் தெரியவந்துள்ளது.

பெஷாவரில் இருந்து ஜாஃபர் எக்ஸ்பிரஸ் சரியாக 9 மணிக்கு வர இருந்த நிலையில் இந்தக் குண்டு வெடிப்பு இடம் பெற்றுள்ளது. குறித்த நேரத்தில் ரயில் வந்திருந்தால் பலி எண்ணிக்கை மிகப்பெரிய அளவில் அதிகரித்திருக்கும் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.



தற்கொலை படை மூலம் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளதோடு விசாரணைகளையும் தீவிரப்படுத்தியுள்ளனர்.

குண்டு வெடிப்பு நடைபெற்ற போது ரயில் நிலையத்தில் சுமார் 100 பேர் வரையில் இருந்தனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

## முகத்தை மூட தடை மீறினால் அபராதம்!



(ஜெனீவா)

சுவிட்சர்லாந்தில் அடுத்தாண்டு முகத்தை முழுமையாக மூடியவாறு பொது வெளிகளில் நடமாடுவது தடைசெய்யப்படவுள்ளது. இந்தச் சட்டத்தை மீறினால், அபராதம் விதிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு எதிர்ப்புகளையும் தாண்டி சுவிட்சர்லாந்து நாட்டில் முகத்தை மூடியபடி பொது வெளிகளில் நடமாட அடுத்தாண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சுவிட்சர்லாந்தில், இது தொடர்பான தீர்மானம் கடந்த 2021 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டிருந்தது. இதற்கு அந்நாட்டிலுள்ள முஸ்லீம் அமைப்புகள் கடுமையான விமர்சனத்தை முன்வைத்திருந்த நிலையிலேயே தற்போது இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது.

எனினும், விமானங்களுக்குள் தூதரக, தூதரக வளாகங்களில் இந்தத் தடை உத்தரவு அமுல்படுத்தப்படாது என்றும் வழிபாட்டுத் தலங்கள், பிற புனித தலங்களிலும் இந்த உத்தரவு பொருந்தாது என்றும் அந்நாட்டை ஆளும் பெடரல் கவுன்சில் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் உடல்நிலை மற்றும் பாதுகாப்புக் காரணங்களுக்காக முகத்தை மறைத்துக்கொள்ளலாம் என்றும் ஆனால் மத ரீதியாக அல்லது தட்ப வெப்ப நிலை காரணமாக இதனைச் செய்யக் கூடாது என்றும் கூறப்பட்டுள்ளது.

அத்தோடு பொது வெளியில் தங்களை வெளிப்படுத்திக் கொள்ள விரும்பாத நபர்கள் முகத்தை மூடிக் கொள்ள முன் அனுமதி பெறலாம் என்றும் விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. (நி-8)

## மீன்பிடி படகு மூழ்கியதில் இருவர் பலி, 12 பேர் மாயம்

### தென்கொரியாவில் சம்பவம்

(சியோல்)

தென் கொரியாவின் ஜெஜு தீவில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மீன்பிடிப் படகு ஒன்று மூழ்கியதில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளதுடன் 12 பேர் காணமல் போயுள்ளனர்.

129 தொன் எடையுள்ள படகு கடலில் மூழ்குவதாக முறைப்பாடு கிடைத்ததைத் தொடர்ந்து அருகிலுள்ள மற்றொரு படகு எச்சரிக்கையை எழுப்பிய நிலையில் மீட்பு நடவடிக்கையை ஜெஜு தீவின் கடலோர காவல்படை அதிகாரிகள் ஆரம்பித்துள்ளனர்.



மீன்பிடிப் படகில் இருந்த 27 பணியாளர்களில் 15 பேர் மீட்கப்பட்டனர். அதில் இரண்டு தென்கொரிய பிரஜைகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளனர். 12 பேர் காணாமல் போயுள்ளனர். அவர்களில் இருவர் இந்தோனேசியாவைச் சேர்ந்தவர்கள்.

மூன்று கடற்படைக் கப்பல்கள், 13 விமானங்கள் மற்றும் பல ஆழ்கடல் சுழியோடிகள் உட்பட மொத்தம் 43 கப்பல்கள் மீட்புப் பணிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. (நி-8)

## ட்ரம்பை கொல்ல ஈரான் மீண்டும் சதி?

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றுள்ள ட்ரம்பை கொல்ல ஈரான் முயற்சிப்பதாக குற்றம் சாட்டப்பட்டு வருகிறது. ஆனால் அதை ஈரான் மறுத்தது.

இந்த நிலையில் தேர்தலுக்கு முன்னதாக ட்ரம்பை கொல்ல ஈரான் சதித் திட்டம் தீட்டியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து அமெரிக்க நீதித்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

ட்ரம்பை கொல்ல ஈரானின் சதித்திட்டத்தை எப்.பி.ஐ முறியடித்தது. ஈரான் புரட்சிகர காவலர் படையைச் சேர்ந்த பர்ஹாத் ஷகேரியிடம் ட்ரம்பை கொல்லும் திட்டம் ஈரான் ஆட்சியால் வழங்கப்பட்டது. அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.


மேலும் அமெரிக்காவை சேர்ந்த கார்லிஸ்லே ரிவேரா, ஜொனாடன் லோட்ஹோல்ட் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பர்ஹாத் ஷகேரியின் அறிவுறுத்தலின் பேரில் ஈரான் ஆட்சியை விமர்சிக்கும் ஒரு அமெரிக்க பத்திரிகையாளரை கொல்லும் சதியில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறக்கணிக்கப்பட்ட கிளிநொச்சித் தொகுதியை புதுமெருகுடன் தனிமாவட்டம் ஆக்கிய

# ஆனந்தசங்கரி

தினகரன் வாரமஞ்சரி 15.06.2003 ஞாயிற்றுக்கிழமை



(சி- 180)

எழுபத்தொராவது அகவையில் காலெடுத்து வைக்கும் சங்கரி அவர்களை அவர்தம் பிறந்த நாளினை நினைவு கூர்ந்து கடந்தகால நிகழ்வுகளையும் சாத னைகள் சோதனைகள் ஒரு தடைவை திரும்பிப் பார்ப்பது காலத்தின் கட்டாயமாக இருக்கின்றது.

ஒரு காலத்தில் சோறு கொடுக்கும் சோழ மண்டலமாக இருந்த மண் இன்று தனது சொத்தினையே தொலைத்து விட்டு சோதனைக்கும் வேதனைக்கும் ஆட்பட்டு மீண்டும் தலை நிமிர்ந்து தன்னிறைவினைக் காண்போம் என மார்நிமிர்த்தி நிற்பது மகிழ்வினைத் தருகிறது. இத்தனை மாண்பிற்கும் மரியாதைக்கும் காரணகர்த்தாவாக இருந் தவர்களுள் சங்கரி என்னும் மானுடன் முதன்மையானவன்.

இன்று வரை ஒரு குழி நிலம் தன்னும் தனக்கு சொந்தமாக இல்லாத நிலையிலும் புகலிடம் தேடி ஓடி வந்த மக்களை உபசரித்து உண்ண உணவளித்து வாழ நிலம் வழங்கி அவர்களின் வாழ்வில் தன்னிறைவு கண்ட வரலாறுகள் அனேகம். அதை பறைசாற்ற மாவட்டத்தின் பல கிராமங்கள் புதுப்பெயர் குறித்து நிற்கின்றன.


இலங்கையின் தலையென வர்ணிக்கப்படும் வடமராட்சிப் பகுதியின் பருத்தித்துறை தொகுதியில் 15.06.1933ல் திரு.வீரசிங்கம் இரத்தினம் தம்பதிகளுக்கு புத்திரனாகப் பிறந்து அச்சுவெலி கிறிஸ்ரி யன் கல்லூரி, புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி ஆகியவற்றில் தன் கல்வியினைத் தொடர்ந்து அதன் மூலம் சமூகத்தின் சிறந்த வழிகாட்டிகளாக மக்களை உரு வாக்கு வதாயின் அதற்கு ஆசிரியப் ஆசிரியப் பணியே பொருத்தமானதெனக் கருதிப் போலும் ஆசிரியர் தொழிலை மேற்கொண்டு நாட்டின் பல இடங்களிலும் தன் பணி செய்து இறுதியாக கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி மகா வித்தியாலயத்தில் தனது ஆசிரியக் கடமையினைத் தொடர்ந்தார். அக்கால கட்டத்தில் கிளிநொச்சியின் கல்வித்தரம் இவரை வெகுவாகப் பாதித்தது எனச் சொல்லலாம். பல மாணவர்கள் எண்ணுதலிலேயே தவறுகள் விடுவதைக் கண்டு இவர்களின் பின்புலங் களையும் அதற்கான காரண காரியங்கள் அனைத்தையும் இனங் கண்டார். இடதுசாரிக் கொள்கையில் தன்னை முழமையாக ஈடுபடுத்திக் கொண்டதனால் அடிமட்ட மக்களுடன் மிகவும் அன்னி யோன்னியமாக பழகுவதும் அவர்கள் சுகதுக்கங்களில் பங்கெடுப்பதும் இயல்பாகவே இருந்ததினால் பல முற்போக்குச் சிந்தனைகளும் செயற்றிட்டங்களும் மனதில் தயாரான நிலையில் தன் சக தோழர்களுடன் இவற்றினை மனம் விட்டுச் சொல்லி இவற்றுக்கான தீர்வுகளின் வடிவங்களையும் இனங் கண்டார். இச்சந்தர்ப் பத்தில் கிளிநொச்சி கரைச்சி கிராம சபையின் தேர்தல் வந்தது. "அதனை ஏன் சங்கரி உனது எண்ணத்தின் ஆரம்ப செயற்பாட்டின் வடிகாலாக இறங்கக்கூடாது" என்ற பலரின் வேண்டு கோளை ஏற்று 1965ல் உள்ளுராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட்டார். இவரை எதிர்த்து கிளிநொச்சியின் நில உடமையாளர்கள், பண வசதி படைத்த பெரியவர்கள் போட்டியிட்டனர். சாமான்யனாக நின்று அத்தேர்தலில் மக்களின் அமோக ஆதரவுடன் வெற்றி பெற்றார். அச் சபையின் தலைவராக இவரே தேர்ந் தெடுக்கப்பட்டார்.

தொகுதி சம்பந்தமாக முன்மொழியப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் மாவட்ட ரீதியில் நோக்கப்பட்டு அள்ளித் தெளிக்கும் நிதியில் கிள்ளித் தெளிக்கும் தொகுதியாக கிளிநொச்சி கணிக்கப்படுவது கண்டு பல சந்தர்ப்பங்களில் பலருடன் விவாதிக்க வேண்டியவராகவும் மாறினார். அதனால் கினிநொச்சியை தனி மாவட்டமாகப் பிரித்துவிடுங்கள் என்று பகிரங்கமாக கேட்டார்.

ஒரு மனிதன் வாசிப்பதனால் பூரணமடை கின்றான் என்பதற்கொப்பாகவும் தனது ஆசிரியப் பணி அனுபவமும் இவரை கிராம சபைக்கென ஒரு நூலகம் அமைக்கத் தூண்டியது. அதன் பயன் அன்றைய கால கட்டத்தில் சகல வசதிகளுடனும் ஒரு நூலகத்தை கிளிநொச்சி கரடிப்போக்கில் நிறுவியதுடன் வாசிப்பாளர்களுடன் தானும் ஒருவராக இருந்து கற்றலின் அவசியத்தினை உணர்த்தினார்.

1968இல் கிளிநொச்சி பட்டின சபையை தரமுயர்த்தப்பட்ட நிலையில் மீண்டும் அத்தேர்தலினை சந்தித்து பட்டின சபையின் முதல் தலைவராகவும் தேர்ந் தெடுக்கப்பட்டார். இச்சந்தர்ப்பத்தில் தன்னை ஒரு அங்கீகரிக்கப்பட்ட சட்டத் தரணியாகவும் தரமுயர்த்திக் கொண்டார். ஒரு ஆசிரியராக கிராம சபையின் தான் பெற்ற அனுபவம் ஒரு சட்டத் தரணியாக பட்டின சபை நிர்வாகத்தில் பரிணாமம் பெற்றது. இதனால் சட்ட நுணுக்கங்கள் பலவற்றின் துணைகொண்டு கிளிநொச்சியின் எதிர் காலத்தினை வடிவமைத்துக் கொண்டார்.

ஒரு சபையின் ஆளுமையில் தன்னை வெளிப்படுத்துக் கொண்ட சங்கரி தொகுதி வாழ் மக்களின் மனங்களின் பேசப்பட்டவராக இவரின் செயற்பாடு இருந்ததினால் அகில இலங்கைக் காங்கிரஸ் கட்சியின் கிளிநொச்சி வேட்பாளராக நிறுத்தப் பட்டார். 1970இல் இவ்வாறு கிடைக்கப்பட்ட சந்தர்ப்பம் அமோக வெற்றியைப் பெற்றுக் கொடுத்தது. அதன் மூலம் அசைக்க முடியாத ஒரு பாராளுமன்ற உறுப்பினராக உறுதிப்படுத் தப்பட்டார்.




1977ல் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் சங்கரியினை எதிர்த்து அன்றைய ஆட்சியின் அமைச்சராக இருந்த திரு செல்லையா குமராசூரியர் அவர்கள் போட்டியிட்டார்கள். அமைச்சரும் இத்தொகுதியில் பல நூற்றுக் கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பும் காணி யற்றவர்களுக்கு திடீர் காணி கச்சேரி நடாத்தி காணிகளை வழங்கியும் உள்ள நிலையில் சகல ரும் தேர்தலினை மிக ஆர்வலுடன் எதிர்பார்த்த நிலையில் மீண்டும் சங்கரி அதிகப்படியான வாக்குகளுடன் வெற்றி பெற்றார். இச்சந்தர்ப்பம் தமிழர் விடுதலைக் கூட்டணி ஓர் அணி, தனி நாட்டுக் கோரிக் கைகள் சாதகமாகவே சங்கரிக்குத் துணை போயின.

ஆசிரியப் பணி, கிராம சபைத் தலைவர், பட்டின சபைத் தலைவர் பதவிகள் போன்றரவ கிடைக்கப்பெற்று பாராளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைத்தமை சங்கரிக்கு பல விடயங்களை இனங்காட்டி நின்றன. தொகுதி சம்பந்தமாக முன்மொழியப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் மாவட்ட ரீதியில் நோக்கப்பட்டு அள்ளித் தெளிக்கும் நிதியில் கிள்ளித் தெளிக்கும் தொகுதியாக கிளிநொச்சி கணிக்கப்படுவது கண்டு பல சந்தர்ப்பங்களில் பலருடன் விவாதிக்க வேண்டியவராகவும் மாறினார். அதனால் கினிநொச்சியை தனி மாவட்டமாகப் பிரித்து விடுங்கள் என்று பகிரங்கமாக கேட்டார். பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனத்தில், ஆனையிறவு உப்பளத்தில் நீர்ப்பாசன திணைக்களத்தில் தொகுதி மக்களுக்கு கிடைப்பது கூலி வேலை தான. உயர் பதவிகளிலும் வேறு இடங்களும் தொகுதி இல்லாதவர்களை கொண்டு நிரப்பப்படு வதை ஆட்சேபிக்கும் சந்தர்ப்பங்களில் சொல்லப்படுவது கிளிநொச்சியில் தகுதியானவர்கள் எவரும் இல்லையே என்பதேயாகும். இது வெகுவாக சங்கரியை வெகுவாகப் பாதித்தது. கல்வியில் அபிவிருத்தியடையாத மாவட்டமாக யாழ்ப்பாணம் இருந்தாலும் அதற்குள் கிளிநொச்சி தொகுதியும் உள்ளடக் கப்பட்டதனாலும் பல்கலைக்கழகத் தேர்விலும் ஆசிரியப் பயிற்சிக்கும் இம்மாவட்ட மாணவர்களின் கல்வித்தரம் எட்டிப் பார்கக் கூட முடியாத அளவிற்கு தரம் குறைந்தே காணப்பட்டது.

இவற்றினை வெல்வதாயின் பிரிந்து நின்று சாதிப்பதனால் முடியும் என்று எண்ணினார். அதனால் தனிமாவட்ட கோரிக்கையினை முன்வைத்தார். முதலில் அதனை ஏற்க மறுத்த தலைமைப்பீடம் எதற்கும் ஒத்துவராத சங்கரியின் விடாப்படித் தன்மை இறுதியில் தனி மாவட்டமாக கிளிநொச்சி தொகுதியினை ஆக்குவதே சரியானது என உணரத் தலைப்பட்டனர். இதனால் தனி மாவட்டமாகவும் கல்வியில் அபிவிருத்தி அடையாத கல்வி மாவட்டமாகவும் கிளிநொச்சி தொகுதி பிரகடனப்படுத்தப்பட்டது. இதனால் இன்று எத்தனை மருத்துவுர்கள், பொறியியலாளர்கள், விஞ்ஞான கலைப்பட்டதாரிகள், சட்டத்தரணிகள் உருவாகியிருக்கின்றனர். இதற்கான மூலகர்த்தாவும் பிதா மகனும் சங்கரி தான் என்பதை எவரும் மறுக்க முடியாது. சங்கரியன் அரசியல் தலைமைத்துவங்களின் வழி காட்டல்கள் கலாநிதி என்.எம்.பெரோ, தந்தை செல்வநாயகம், ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களினது செப்பனிடப்பட்ட சீரான அரசியற் பாதைகளில் நடப்பதனை இன்றும் பெருமையாகக் கூறுவார். இன்றைய பாராளுமன்றத்தில் காலஞ் சென்ற டட்லி சேனநாயக்கா, ஜே.ஆர்.ஜயவர்த்தனா, ஆர்.பிரேமதாசா, ஏ.சி.எஸ்.ஹமீட், காமினி திசாநாயக்க, வி.ஏ.சுகததாஸா, அப்துல் பாக்கீர் மாக்கார், கலாநிதி டபிள்யூ தகநாயக்கா, சிறிமாவோ பண்டாரநாயக்கா, மைத்திரி பால சேனநாயக்கா, பீலிக்ஸ் ஆர் டயஸ் பண்டாரநாயக்கா, கொல்வின் ஆர்.டி. சில்வா, லெஸ்லி குணவர்த்தன, விவியன் குணவர்த்தன, பேர்னாட் சொய்சா, எஸ்.ஏ.விக்கிரமசிங்க, பீட்டர் கெனமன், எம்.ஜி.மெண்டிஸ் போன்ற தலை சிறந்த இந்த நாட்டின் அரசியல்வாதிகள் இலங்கைப் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த காலத்தில் அவர்களுடன் அக் காலத்தில் இருந்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வீரசிங்கம் ஆனந்தசங்கரி தான் என்ற பெருமையும் இவருக்குண்டு.

இன்று கடந்த கால சம்பவங்களை சந்தர்ப்பம் கிடைக்கும் போது ஆதாரங்களு டன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் தவறுவதில்லை. ●

நன்றி : தினகரன் வாரமஞ்சரி 15.06.2003 ஞாயிற்றுக்கிழமை.

மகிந்த அரசியலை மறுதலிக்கும்... X வீ.ஆனந்தசங்கரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்-2025
# கரைச்சி பிரதேச சபை கிளிநொச்சி

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சந்தைகள், இறைச்சிக்கடைகள் உள்ளிட்ட குத்தகை நிலையங்களை 2025.01.01- 2025.12.31 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி** :- 2024.11.11 - 2024.11.25
(அலுவலக நாட்களில் மு.ப 09.00 - பி.ப 01.00)
**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி** :-2024.11.26 செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணி
**கேள்விதிறக்கும் திகதி** :-2024.11.26 செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணி
**கேள்விதிறக்கும் இடம்** :- கரைச்சி பிரதேசசபை தலைமை அலுவலகம்.

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை எம்மால் வழங்கப்பட்ட கடித உறையில் செயலாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி என முகவரியிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக குறிப்பிட்டு 2024.11.26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவு தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். அல்லது பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்படும் கேள்வி பெட்டியினுள் மேற்குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் இடப்பட வேண்டும்.

இரண்டாவது பிரதியை உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி என முகவரியிட்டு குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவு தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விகள் யாவும் **2024.11.26** ஆம் திகதி **செவ்வாய்க்கிழமை** மு.ப 10.00 மணிக்கு கரைச்சி பிரதேச சபையில் கேள்விச் சபை முன்னிலையில் திறக்கப்படும். கேள்விச் சபையின் முடிவே இறுதி முடிவாகும். கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விகாரர் பிரசன்னமாகி இருக்கலாம்.

| இல | குத்தகை நிலையம் | கேள்வி வைப்பு பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்வி படிவ கட்டணம் மீளளிக்க முடியாதது | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வி தொகை |
|---|---|---|---|---|
| | சேவைச்சந்தை -கிளிநொச்சி | | | |
| 1 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை தேங்காய் | 100,000.00 | 1,000.00 | 6,711,000.00 |
| 2 | கிளிநொச்சி சந்தை பழம் பாக்கு வெற்றிலை. | 50,000.00 | 1,000.00 | 3,546,000.00 |
| 3 | கிளிநொச்சி சந்தை இல.1 கோழி இறைச்சிக்கடை | 60,000.00 | 1,000.00 | 4,330,200.00 |
| 4 | கிளிநொச்சி சந்தை இல.2 கோழி இறைச்சிக்கடை | 50,000.00 | 1,000.00 | 4,042,500.00 |
| 5 | கிளிநொச்சி சேவைச்சந்தை பொதுமலசலகூடம் | 1,000.00 | 1,000.00 | 45,000.00 |
| | கிளிநகர்ப் பகுதி | | | |
| 1 | கிளிநொச்சி சிறுவர் பூங்காவில் உள்ள ஐஸ்கிறீம் விற்பனை நிலையம் | 10,000.00 | 1,000.00 | 851,000.00 |
| 2 | மருதநகர் இயற்கை பூங்கா | 1,000.00 | 1,000.00 | 16,935.58 |
| 3 | கிளிநொச்சி சிறுவர்பூங்காவில் உள்ள அழகுக்கலையகம் | 1,000.00 | 1,000.00 | 13,846.99 |
| | பொதுச்சந்தை – பரந்தன் | | | |
| 1 | பரந்தன் சந்தை தொகுதி | 1,000.00 | 1,000.00 | 70,000.00 |
| 2 | பொது மலசலகூடம் பரந்தன் | 1,000.00 | 1,000.00 | 24,000.00 |
| | பொதுச்சந்தை- வட்டக்கச்சி | | | |
| 1 | வட்டக்கச்சி சந்தைதொகுதி | 3,000.00 | 1,000.00 | 210,000.00 |
| 2 | வட்டக்கச்சி சந்தை மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 640,000.00 |
| 3 | வட்டக்கச்சி கோழி இறைச்சிக்கடை | 6,000.00 | 1,000.00 | 461,077.31 |
| 4 | இராமநாதபுரம் மாட்டிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 228,075.75 |
| 5 | இராமநாதபுரம் கோழியிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 136,200.00 |
| | .பொதுச்சந்தை- இரணைமடு | | | |
| 1 | இரணைமடுசந்தை கோழி இறைச்சிக்கடை | 7,000.00 | 1,000.00 | 495,100.00 |
| | பொதுச்சந்தை- உருத்திரபுரம் | | | |
| 1 | D10உருத்திரபுரம் மாட்டிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 275,000.00 |
| 2 | D10உருத்திரபுரம் சந்தை தொகுதி | 1,000.00 | 1,000.00 | 7,000.00 |
| 3 | D8 உருத்திரபுரம் மாட்டிறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | 152,420.23 |
| | பொதுச்சந்தை- ஸ்கந்தபுரம் | | | |
| 1 | ஸ்கந்தபுரம் மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 622,000.00 |
| 2 | ஸ்கந்தபுரம் கோழி இறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 410,000.00 |
| | பொதுச்சந்தை- கல்லாறு | | | |
| 1 | கல்லாறு மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 26,848.18 |
| 2 | கல்லாறு சந்தை தொகுதி | 1,000.00 | 1,000.00 | 13,000.00 |
| | வன்னேரிக்குளம் | | | |
| 1 | வன்னேரிக்குளம் சுற்றுலா மையம் | 1,000.00 | 1,000.00 | 27,613.61 |
| | பொதுச்சந்தை- முரசுமோட்டை | | | |
| 1 | முரசுமோட்டை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 23,547.34 |
| | பொதுச்சந்தை- புன்னைநீராவி | | | |
| 1 | புன்னைநீராவி மாட்டிறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | 155,900.00 |
| 2 | புன்னைநீராவி கோழி இறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | 112,000.00 |

## நிபந்தனைகள்

1. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் எதுவித அறிவித்தலுமின்றி இரத்துச் செய்யப்படும்.
2. கடந்தகாலக் கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளை செலுத்த தவறியவர்களும், கறுப்புப் பட்டியலில் உள்ளவர்களும் குத்தகை கேள்விகளில் பங்குபற்றத் தகுதியற்றவர்கள்.
3. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ, நிராகரிப்பதற்கோ கேள்விசபைக்கு அதிகாரமுண்டு.
4. கேள்விகாரர் இலங்கை பிரஜையாகவும் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் கரைச்சிப் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.
5. கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்ள வரும்போது தம் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணத்தின் நிழற்பிரதியை (தேசிய அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதி பத்திரம்) கிராம சேவையாளர் மூலம் உண்மைப் பிரதி என சான்றுப்படுத்தி சமர்ப்பிப்பதுடன் கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழையும் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.
6. கேள்வி விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் போது சபையால் வழங்கப்பட்ட கேள்விப்பத்திரம், கடித உறை என்பவற்றை மட்டுமே பயன்படுத்த முடியும்.
7. சித்தியடையும் கேள்விகாரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதி தொகையினை குறித்த காலத்திற்குள் (ஆகக்கூடியது இருவார காலத்தினுள்) செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.
8. இறைச்சி கடைகள், சந்தைகள், குத்தகை நிலையங்கள் அனைத்தும் குத்தகைக்கு எடுப்பவராலேயே நடாத்தப்பட வேண்டும். குத்தகைகாரர் தவிர்ந்த வேறு ஒருவரால் குத்தகை நிலையம் நடாத்தப்படின் உடனடியாக ஒப்பந்தம் இரத்து செய்யப்படுவதுடன் வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
9. மாதாந்த குத்தகைக் கட்டணங்களை அம்மாத இறுதி வேலை நாட்களுக்குள் செலுத்துதல் வேண்டும். குறித்த கால எல்லைக்குள் செலுத்தத்தவறின் பத்து நாட்களுக்கு உட்பட்டு செலுத்தும் பட்சத்தில் கட்டுப்பணத்துடன் 10% தண்டப் பணத்தையும், காலதாமதம் பத்து நாட்களுக்கு மேற்படும் பட்சத்தில் கட்டுப்பணத்துடன் 15% தண்டப்பணத்தையும் சேர்த்து செலுத்துதல் வேண்டும்.
10. தொடர்ச்சியாக இரு மாதங்கள் குத்தகைக்கட்டணங்கள் செலுத்த தவறும் பட்சத்தில் எதுவித முன்னறிவித்தலுமின்றி குத்தகை நிலையம் சபையால் பொறுப்பேற்கப்படும்.
11. கொல்களத்தில் வெட்டப்பட்ட மாட்டிறைச்சியை,இறைச்சிக் கடையினை குத்தகைக்கு எடுத்தவர் தன்னால் குத்தகைக்கு பெற்றுக்கொண்ட குத்தகை நிலையத்துக்கு மட்டும் எடுத்துச் செல்ல முடியும். பிரதேச சபை எல்லைக்கு அப்பால் எக் காரணத்திற்காகவும் கொண்டு செல்ல அனுமதிக்கப்படமாட்டாது.
12. துவிச்சக்கர வண்டி, மோட்டார் பாதுகாப்பு நிலையத்திற்கான கட்டணமாக துவிச்சக்கர வண்டிக்கு ரூபா 10.00 உம், மோட்டார் சைக்கிளுக்கு ரூபா.20.00 உம், முச்சக்கர வண்டி, கயஸ் போன்ற சிறியரக வாகனங்களுக்கு ரூபா 30.00 உம், கனரக வாகனங்களுக்கு ரூபா 50.00 உம் மட்டுமே அறவிடமுடியும்.
13. அனைத்து தராசுக் கொட்டகைக்குமான வரி அறவீட்டினை மேற்கொள்ளும் போது 4% தூக்கு வரியாக அறவிட முடியும். வரி வீதங்களின் அதிகரிப்பையோ குறைப்பையோ சபையின் அனுமதியின்றி மேற்கொள்ள முடியாது.
14. கிளிநகர்ப்பகுதி வாகன தரிப்பிட கட்டண அறவீடு, ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள் அனைத்தும் "2016.02.02ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையின் (அதிவிசேஷமானது) பகுதி 2- பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் வாகனங்களை நிறுத்துதலை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல்" தொடர்பான 1 தொடக்கம் 36 வரையான நியமத்துணை விதிகளுக்கு கட்டுப்படும்.
15. ஆரம்பகேள்வி தொகையைவிட குறைவான கேள்வி கோருபவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்விவைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
16. சபையால் கட்டப்பட்ட கடைகள் காணப்படாதவிடத்து சபையால் கடைகட்டப்படும்வரை தற்காலிக கடை குத்தகைதாரராலேயே கட்டப்பட வேண்டும். இதற்கான செலவீனங்களை சபை பொறுப்பேற்காது என்பதுடன் சபையால் கடை கட்டி வழங்கப்படவில்லை என்ற காரணத்தை முன்வைத்து மாதாந்த கட்டணத்தில் விலக்களிப்போ, குறைப்பனவோ வழங்கப்படமாட்டாது.
17. இறைச்சிகடைக்குரிய மாதாந்த இடவாடகை கட்டணமாக ரூபா 1500.00 இனை ஒவ்வொரு மாதமும் சபைக்கு செலுத்த வேண்டும்.
18. இங்கு குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக பிரதேச சபை செயலாளரினால் காலத்துக்கு காலம் விதிக்கப்படும் எழுத்து மூல நிபந்தனைகளையும் குத்தகைகாரர் கடைப்பிடிக்க வேண்டும்.
19. மாட்டிறைச்சி கடைகளை குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் வெளியிடப்படும் வர்த்தமானிகள், சுற்றுநிருபங்களுக்கு அமைய சபையினால் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.
20. இந் நிபந்தனைகள் தொடர்பாக சபையின் எந்தவித முடிவையும் ஏற்பதுடன் இது தொடர்பில் சபைக்கெதிராகவோ செயலாளருக்கெதிராகவோ நீதிமன்ற நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளமுடியாது.

(அ-1547)

செயலாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி.

10.11.2024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தஞ்சைப் பெரிய கோயிலில்

# சிறப்பு சொற்பொழிவாற்றுகிறார் கலாநிதி. ஆறு திருமுருகன்



(சென்னை)

மாமன்னர் இராஜராஜசோழனின் 1039 ஆவது சதயப் பெருவிழா இந்தியாவின் தஞ்சாவூர் அருள்மிகு பெருவுடையார் திருக்கோயிலில், தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத் துறையினரால் கொண்டாடப்படுகிறது. சமய அனுட்டானங்கள் மற்றும் 'கலை நிகழ்வுடன் வெகு விமரிசையாக கொண்டாடப்படும் இந்நிகழ்வில் ஈழத்தைச் சேர்ந்த சிவபூமி அறக்கட்டளை யின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் இன்று ஞாயிற்றுக்கிழமை சிறப்பு உரையாற்றவுள்ளார். (நி-8)



பாராளுமன்ற பொதுத் தேர்தல் - 2024

(யாழ் - கிளிநொச்சி மாவட்டம்)

வைத்திலிங்கம் குகதாஸ்

B.A (COL), PGDM (SJ), PGDM (RU), SLACS CLASS I

(ஓய்வுநிலை கணக்காய்வாளர் (வடமாகாணம்)



X 8

(055) அகில இலங்கை தமிழர் மகா சபை








வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில்

ஆளுமை திறனூக்கப்பயிற்சி ஆரம்பம்.

☆ உடல் நலம் பெற : எளியமுறை ஆசனங்களுடன் பயிற்சி

☆ மன அமைதி பெற : எளிய தியானப் பயிற்சி

☆ உயிர் வளம் பெற : காயகல்ப பயிற்சி

☆ நற்பண்புகள் பெற : தற்சோதனை பயிற்சிகள்

ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை

மாலை 5.00 தொடக்கம் 7.00 மணி வரை

தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்துள்ள பேராசிரியர்களால் பயிற்சிகள் கற்றுத்தரப்படும்

☆ இப்பயிற்சிகளை தொடர்ந்து செய்து வருவதால்

| | |
|---|---|
| சக்கரை நோய் - DIABETES | இடுப்பு வலி - BACK PAIN |
| மன உளைச்சல் -TENSION | சைனஸ் - SINUS |
| இரத்த அழுத்தம் -BLOOD PRESSURE | இருதய நோய்கள் - HEART DISEASE |
| ஆஸ்த்துமா - ASTHMA | குழந்தை பேரின்மை - INFERTILITY |
| மூட்டு வலி - JOINT PAIN | மாணவர் கை நடுக்கம் - SHIVERING |

இவற்றில் இருந்து விடுபட்டு ஆரோக்கியமான வாழ்க்கை நம் வசமாகும்.

(சி-1552)

தொடர்புகளுக்கு :- யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்

இல 81 பிறவுன் வீதி கொக்குவில் கிழக்கு கொக்குவில் யாழ்ப்பாணம்

கொ.இல :- 0212222772.0777368745. 0768571395.0778916407


# முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சலுகைகளை மாற்றத் தயார்

## ஜனாதிபதி அநுர திட்டம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு சட்டத்தின் ஊடாக வரப்பிரசாதங்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும் அதனை மாற்றுவதற்குத் தாம் தயாராகவுள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

குருநாகல் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் ஆட்சியிலிருந்தவர்கள் தற்போது ஆட்சி அதிகாரத்தை தங்களது உறவினர்களுக்கு வழங்க முயற்சிக்கின்றனர். அவர்கள் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியுமென எண்ணுகின்றார்கள். நாட்டை கட்டியெழுப்பும் வரையில் தற்போதைய அரசாங்கத்தை மாற்றியமைக்க முடியாது. முன்னாள் ஜனாதிபதிகளுக்கு 20 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் வழங்கப்படுகின்றன.

இதன்படி, முன்னாள் ஜனாதிபதிகளுக்கு அரசியலமைப்பு மற்றும் சுற்றறிக்கை போன்றவற்றின் ஊடாக பல வரப்பிரசாதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அவ்வாறானவற்றை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.(நி-8)


வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை கரவெட்டி

09.11.2024 நேற்றைய வலம்புரிப் பத்திரிகையில் 12 ஆம் பக்கத்தில் வெளிவந்த 'சந்தைக்கடைகள், இறைச்சிக்கடைகள் ஆகியவற்றிற்கான 2025.01.01-2024.12.31 வரையான காலப்பகுதிக்குரிய குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்- 2025' என்ற விளம்பரத்தின் இறுதிப் பகுதியில் '30.10.2024 ஆம் திகதிய வலம்புரி, தினக்குரல் பத்திரிகையில் ஏற்கனவே பிரசுரமான கேள்வி அறிவித்தல் இத்தால் மீளப் பெறப்படுகின்றது' என்பதை இணைத்து வாசிக்கவும்.

செயலாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு
பிரதேச சபை, கரவெட்டி.

(சி-1543)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத்தேர்தலில் வாக்களிப்பது எப்படி?

எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல் இடம்பெறவுள்ளது.

பாராளு மன்றத் தேர்தலின் போது வாக்காளர்கள் எவ்வாறு வாக்களிக்க வேண்டும் என்பதை சுருக்கமாக விளக்கும் பொருட்டு வன்னித் தேர்தல் மாவட்டத்தை உதாரணத்துக்கு எடுத்துக் கொண்டு வாக்களிக்கும் முறைமை விளங்கப் படுத்தப்படுகிறது.

இங்கு 23 அரசியல் கட்சிகளும் 25 சுயேட்சைக் குழுக்களுமாக 48 குழுக்கள் போட்டியிடுகின்றன.

அரசியல் கட்சிகளாயினும் சுயேட்சைக் குழுக்களாயினும் ஏதேனும் ஒன்றை மட்டுமே நீங்கள் தெரிவு செய்து அதற்கு வாக்களிக்க வேண்டும்.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட மாதிரிவாக்குச் சீட்டைப் பார்க்கும் போது உங்களுக்கு இடப்பக்கமாக உள்ள பகுதியில் அரசியல் கட்சிகளின் பெயர்கள் இருக்கின்றன.

அதைத் தொடர்ந்து அக்கட்சிகளின் சின்னங்கள் இருக்கின்றன. அதனோடு ஒரு கூடு இருக்கின்றது. அக்கூட்டுக்கு உள்ளேதான் நீங்கள் விரும்பும் கட்சிக்கு புள்ளடி இட வேண்டும். உங்கள் புள்ளடி கூட்டுக்கு வெளியே நீளாதவாறு இடுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

இதேபோல் வாக்குச் சீட்டின் வலது பக்கத்தில் சுயேட்சைக் குழுக்களின் பெயர்களும் அவற்றோடு சேர்ந்து அதற்குரிய சின்னங்களும் தொடர்ந்து புள்ளடியிடுவதற்கான கூடும் உள்ளது.

நீங்கள் சுயேட்சை குழுவுக்கு வாக்களிப்பதாயின் வாக்குச் சீட்டின் வலது பக்கத்தை பார்த்தாலே போதுமானது.

நீங்கள் மேற்கூறியவாறு புள்ளடியிட்டவுடன் நீங்கள் உங்கள் கட்சிக்கு அல்லது சுயேட்சைக் குழுவுக்கு வாக்களித்து விட்டீர்கள்.

நீங்கள் கட்சியில் அல் லது சுயேட்சைக் குழுவில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு வாக்களிக்க விரும்பினால், உங்களுக்கு தரப்பட்ட வாக்குச் சீட்டின் கீழே 1 தொடக்கம் 9 வரை இலக்கமிடப்பட்ட பெட்டியிருக்கும். அங்குதான் நீங்கள் வேட்பாளர்களுக்கு விருப்பு வாக்களிக்க வேண்டும்.

நீங்கள் ஒரு வேட்பாளருக்கு மட்டும் வாக்களிக்க விரும்பினால் அவ்விலக்கத்திற்கு மட்டும் புள்ளடியிடவும். இரண்டு வேட்பாளர்களுக்கு மட்டும் வாக்களிக்க விரும்பினால் அவ்விலக்கங்களுக்கு மட்டும் புள்ளடியிடவும். மூன்று வேட்பாளர்களுக்கு வாக்களிக்க விரும்பினால் அவ்விலக்கங்களுக்கு மட்டும் புள்ளடியிட வேண்டும். மூன்று பேருக்கு மேல் விருப்பு வாக்களிக்க முடியாது.

பாராளுமன்றத் தேர்தல் -2024 அட்டவணை -2
போட்டியிடும் கட்சிகளின் பெயர்கள், சுயேட்சை குழுக்களின் இலக்கங்கள் மற்றும் அவற்றின் சின்னங்கள் - வன்னி மாவட்டம்

| போட்டியிடும் குழு | சின்னம் | போட்டியிடும் குழு | சின்னம் |
|---|---|---|---|
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | | சுயேட்சை குழு 2 | |
| இலங்கைத் தமிழரசுக் கட்சி | | சுயேட்சை குழு 3 | |
| ஈரோஸ் ஜனநாயக முன்னணி | | சுயேட்சை குழு 4 | |
| ஈழ மக்கள் ஜனநாயக் கட்சி | | சுயேட்சை குழு 5 | |
| ஐக்கிய தேசிய கட்சி | | சுயேட்சை குழு 6 | |
| ஐக்கிய தேசிய கூட்டமைப்பு | | சுயேட்சை குழு 7 | |
| ஜனநாயக ஐக்கிய முன்னணி | | சுயேட்சை குழு 8 | |
| மக்கள் போராட்ட முன்னணி | | சுயேட்சை குழு 9 | |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | | சுயேட்சை குழு 10 | |
| ஜனசெத பெரமுன | | சுயேட்சை குழு 11 | |
| தேசிய மக்கள் சக்தி | | சுயேட்சை குழு 12 | |
| தேசிய ஜனநாயக முன்னணி | | சுயேட்சை குழு 13 | |
| நாட்டுப்பற்றாளர் மக்கள் சக்தி | | சுயேட்சை குழு 14 | |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | | சுயேட்சை குழு 15 | |
| ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி | | சுயேட்சை குழு 16 | |
| ஜனநாயக தேசிய கூட்டணி | | சுயேட்சை குழு 17 | |
| ஜனநாயக இடதுசாரி முன்னணி | | சுயேட்சை குழு 18 | |
| நல்லாட்சிக்கான தேசிய முன்னணி | | சுயேட்சை குழு 19 | |
| சிறீலங்கா தொழிலாளர் கட்சி | | சுயேட்சை குழு 20 | |
| சிறீலங்கா பொதுஜன பெரமுன | | சுயேட்சை குழு 21 | |
| ஐக்கிய மக்கள் சக்தி | | சுயேட்சை குழு 22 | |
| சமநிலம் கட்சி | | சுயேட்சை குழு 23 | |
| சர்வஜன அதிகாரம் | | சுயேட்சை குழு 24 | |
| சுயேட்சை குழு 1 | | சுயேட்சை குழு 25 | |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
|---|---|---|---|---|---|---|---|---|

# இராசிபலன்

10.11. 2024
ஐப்பசி 24,ஞாயிற்றுக்கிழமை
நவமி பிற்பகல்- 5.07மணிவரை

அவிட்டம் முற்பகல் 7.53 மணிவரை
சுபநேரம் -9.05-10.35 மணிவரை
இராகுகாலம் 4.35-6.05 மணிவரை

சந்திராஷ்டமம் - பூசம்.

வளவன்


மேஷம்

இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் பெற முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.


கடகம்

கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம், பொது வாழ்வில் சிலர் கௌரவக் குறைவாக நடந்து கொள்வார்கள்.


துலாம்

வளர்ச்சி கூடும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, நிதி நிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும், பெண் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும்.


மகரம்

பொது வாழ்வில் புகழ் கூடும், செய்தொழில் மேன்மையுண்டு, பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள், வார்த்தைகளில் நிதானம் தேவை.


ரிஷபம்

பாதியில் நின்ற பணியை மீண்டும் தொடர்வீர்கள், சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும். சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம்.


சிம்மம்

சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.


விருச்சிகம்

நன்பர்களின் சந்திப்பால் நன்மையுண்டு, கட்டடப் பணியைத் தொடரும் வாய்ப்புண்டு, பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.


கும்பம்

கற்பனை மிகுதியான நாள், நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.


மிதுனம்

விட்டுப்போன தொடர்புகள் மீண்டும் வந்து சேரலாம், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


கன்னி

முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், சுவாரஷ்மான சம்பவங்கள் இடம்பெறலாம், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.


தனுசு

பாகப் பிரிவினைகள் சுமூகமாக அமையும், உறவினர்கள் உங்களின் முன்னேற்றத்திற்கு உறுதுணை புரிவர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


மீனம்

ஆனந்த வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம்.

உழைப்பின் வேர்கள் கசப்பானவை அதன் கனிகள் இனிப்பானவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் எடுக்கின்ற ஒவ்வொரு முடிவின் மூலம் பிறருக்கு என்ன நன்மை ஏற்படும் என உணர்வதே முடிவு எடுப்பதற்கான சரியான விதிமுறையாகும். - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஜனாதிபதி அநுரவின் யாழ்ப்பாண வருகை

கண்ண பரமாத்மாவை குசேலர் தன் வறுமையின் பொருட்டுச் சந்திக்கச் செல்கின்றார்.

மிகப்பெரிய தனவந்தரைச் சந்திக்கச் செல்வதாயினும் வெறுங்கையோடு செல்வது பண்பாடல்ல என்பதால், குசேலர் தன் மனையாள் ஆக்கிக் கொடுத்த அவலை கண்ணனுக்காக எடுத்துச் செல்கிறார் என்பது கதை.

ஆம், இந்த நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட அநுர குமார திஸாநாயக்க இன்று நவம்பர் 10ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகிறார்.

ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர் அவரின் முதலாவது யாழ்ப்பாண விஜயம் இது.

அவரின் வருகை பொதுத் தேர்தலுக்கான பிரசாரத்தின் பொருட்டாக இருப்பினும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட - போரில் தம் உறவுகளை இழந்து தவிக்கின்ற - படையினரிடம் ஒப்படைக்கப்பட்டு; பின்னர் காணாமல் ஆக்கப்பட்ட தம் உறவுகளைத் தேடிக் களைத்து கண்ணீரும் கம்பலையுமாக உள்ள மக்கள் வாழுகின்ற தமிழர் பகுதிக்கு அவர் வருகை தருகிறார்.

இதுதவிர, போரில் அங்கவீனமாகி வீடுகளுக்குள் முடங்கிக் கிடக்கின்ற துன்பமும் சொந்த நில புலங்களை படையினரின் ஆக்கிரமிப்பால் இழந்து நிர்க்கதியாக நிற்கின்றவர்களும்

போரின் வன்கொடுமைகளுக்கு ஆளாகி இன்றுவரை நீதி கிடைக்காமல் சதா ஏக்கத்துடன் வாழுகின்ற மக்களைச் சந்திக்க வருகின்ற ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நிச்சயம் வெறுங்கையோடு வரமாட்டார் என்று நம்பலாம்.

தனது தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரத்தின் பொருட்டு அவர் யாழ்ப்பாணத்துக்கு வருவதன் காரணமாக, தமிழ் மக்களை சந்திக்கின்ற - அவர்கள் மத்தியில் உரையாற்றுகின்ற வாய்ப்பு அவருக்கு நிச்சயம் உண்டு.

உண்மையில் ஜனாதிபதி அநுரவின் உரை தமிழ் மக்களின் வாக்குகளுக்கானதாக இருக்காமல், தமிழ் மக்களின் உரிமைக்கானதாக இருக்கும் என்ற நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் எம் மக்களிடம் உள்ளது.

அதேபோன்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க யாழ்ப்பாணம் பாசையூரில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுவதற்கு முன்னதாக; யுத்தத்தால் தமிழ் மக்கள் அனுபவித்த அவலங்களை - தமிழ் மக்களுக்கான தீர்வை - தமிழர் பிராந்தியத்தில் நடந்துள்ள படையினரின் ஆக்கிரமிப்பை, அந்தக் கட்சியின் சார்பில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுகின்ற தமிழ் வேட்பாளர்கள் பட்டியல்படுத்தி உரையாற்ற வேண்டும். அதற்கு ஜனாதிபதி அநுர பதிலளிக்க வேண்டும்.

இது தேர்தலின் பொருட்டன்று. மாறாக, எம் தமிழ் மக்களின் வாழ்வியலின் பொருட்டு என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து கொண்டு அதனைக் கனகச்சிதமாகச் செய்தாக வேண்டும்.

# நிவாரணம் வழங்குவதற்குப் பதிலாக வரிசை யுகம் உருவாக்கப்பட்டுள்ளது

## ஜனாதிபதி அநுரவை சாடிய சஜித்

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மக்களுக்கு நிவாரணம்வழங்குவதற்குப் பதிலாக மீண்டும் வரிசை யுகத்தை உருவாக்கி உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கொலன்னாவையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அத்தோடு, தற்போதைய ஜனாதிபதி மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மீறினாலும், தாம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மீறவில்லை என்றும் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஆட்சிக்கு வந்ததும் வரிச்சுமை குறைப்பு, எண்ணெய் விலை குறைப்பு, மின்சாரக் கட்டணம் குறைப்பு மற்றும் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதாக கூறியதாகவும், ஆனால் இன்று அதில் எதுவுமே நிறைவேற்றப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குப் பதிலாக மீண்டும் வரிசையில் நிற்கும் யுகம் உருவாகியுள்ளதாகவும், கடவுச்சீட்டு வரிசை கூடக் குறையவில்லை எனவும் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எரிபொருள் விலை சூத்திரத்திற்கு ஜனாதிபதி அடிமையாகிவிட்டதாகவும், பெரும் முதலாளித்துவ வர்க்கம் பயன்படுத்தும் வாகனங்களுக்கு மாத்திரம் எரிபொருள் விலையை குறைத்துள்ளதாகவும், இதனால் சாதாரண மக்களுக்கு எந்த நன்மையும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், சாதாரண மக்களுக்காக நிற்பதாகக் கூறும் ஜனாதிபதி இன்று முதலாளித்துவ வர்க்கத்திற்காக நிற்கின்றார் என சஜித் பிரமதேஸ மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

### பொதுத் தேர்தலில் சுமார்

## 50 வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள்

எதிர்வரும் பொதுத்தேர்தலில் சுமார் 50 வெளிநாட்டுத்தேர்தல்கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்பாளர்கள் இலங்கைக்கு ஏற்கனவே வருகை தந்துள்ளதை தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் ஆர்.எம். ஏ.எல்.ரத்நாயக்க உறுதிப்படுத்தியுள்ளார்.

சுதந்திரமான தேர்தலுக்காக ஆசிய வலையமைப்பில் இருந்து தேர்தல் கண்காணிப்பாளர்கள் எதிர்வரும் நாட்களில் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் தேர்தல் ஆணைக்குழுவின் அழைப்பிற்கமைய சார்க் நாடுகள் மற்றும் ரஷ்யாவின் பிரதிநிதிகள் உட்பட எட்டு நாடுகளின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் குழுவும் நாட்டிற்கு வருகை தரவுள்ளனர்.

இதேவேளை, தேர்தல் பிரசார காலத்தில் அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவது மிகக்குறைவாகவே காணப்படுவதாக தேர்தல் அவதானிகள் குறிப்பிட்டுள்ளனர். (ம-7)

## 16 வயது சிறுவன் கைது

களுத்துறை, அளுத்கம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையம்ஒன்றிலிருந்து கையடக்கத் தொலைபேசிகளை திருடியதாகக் கூறப்படும் 16 வயதுச் சிறுவன்ஒருவன்கைது செய்யப்பட்டுள்ளதாக அளுத்கம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த திருட்டுச் சம்பவம் கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையத்தில் உள்ள சிசிரிவி கமராவில் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அளுத்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## ரூ. 8 இலட்சம் பெறுமதியான கஞ்சா மன்னாரில் மீட்பு

### சந்தேக நபர் ஒருவர் கைது

(மன்னார்)

மன்னார் நகரில் இராணுவ புலனாய்வுப்பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் எட்டு இலட்சம் பெறுமதியான கேரளக் கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத்தக வலைத் தொடர்ந்து குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மன்னார் இராணுவ புலனாய்வுப் பிரிவினர் மற்றும் திருகோணமலைப் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகள் இணைந்து மன்னார் நகரில் மேற்கொண்ட சோதனையில் கற்பிட்டி பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் சுமார் எட்டு இலட்சம் ரூபா பெறுமதியான கேரளக் கஞ்சாவை மன்னார் நகர் பகுதியில் விற்பனை செய்வதற்காக தன்வசம் வைத்திருந்த போதே கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி சந்தேகநபர், அவரிடமிருந்த கேரளக் கஞ்சாவுடன் மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2024
“மரங்களை நேசிக்காத எவரும் இறைவனை நேசிப்பவர்கள் அல்லர்.”
-மூப்பர் அம்பிரோசியோஸ்
(கிரேக்க கிறிஸ்தவ மதகுரு)

### இணையவழி நிதி மோசடி

## 58 இலங்கையர்கள் அடங்கிய குழு கைது

(கொழும்பு)

கொழும்பு, நாரஹேன்பிட்டியில் 58 இலங்கையர்கள் அடங்கிய குழுவொன்று குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளது.

இணையம் ஊடாக நிதி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் கிருலப்பனை அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் இருந்தபோதே கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக நாட்டின் பல பகுதிகளில் இவ்வாறான மோசடிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த மோசடியில் இந்தியா, சீனா உட்பட பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் இலங்கையில் தங்கியிருந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தக் குற்றச்சாட்டின் கீழ் இதுவரை ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## லொறி மோதியதில் ஒருவர் உயிரிழப்பு

புத்தளம், மதுரங்குளி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நல்லன்தலுவ பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் பாதசாரி ஒருவர் உயிரிழந்துள்ளதாக மதுரங்குளி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

லொறி ஒன்று வீதியில் பயணித்த பாதசாரி மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது படுகாயமடைந்த பாதசாரி புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் புத்தளம், நல்லன்தலுவ பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடையவர் ஆவார். இதனையடுத்து, லொறியின் சாரதி சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராளுமன்றத் தேர்தல்-2024

### வாசகர்களின் கருத்துக் கணிப்பு

- யாழ்ப்பாணம்- கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
- வன்னித் தேர்தல் மாவட்டம்

1. மேற்குறித்த இரண்டு தேர்தல் மாவட்டங்களிலும் கட்சிகள் அல்லது சுயேட்சைக்குழுக்கள் பெற்றுக் கொள்ளும் ஆசனங்கள்.

2. பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களின் பெயர்களை தனித்தனி தேர்தல் மாவட்டங்களாக (யாழ்ப் பாணம், வன்னி) குறிப்பிட்டு வலம்புரி நாளிதழின் **076 097 3128** எனும் வட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்.

**நிபந்தனைகள்**
கருத்துக் கணிப்பை அனுப்புபவர்கள்
**முழுப்பெயர், முகவரி,**
**தே.அ.அ.இல,**
**தொ.பே.இல**
**பாஸ்போர்ட் அளவிலான புகைப்படம்**
ஆகிய விபரங்களை உள்ளடக்குவதுடன் ஒருவர் ஒரே மாவட்டத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக் கணிப்புக்களை முன்வைக்க முடியாது என்பதையும் 16 வயதிற்கு மேற்பட்ட இருபாலாரும் இக் கருத்துக்கணிப்பில் பங்குபற்ற முடியும் என்பதையும் கவனத்தில் கொள்க.

**முக்கிய குறிப்பு**
மிகச் சரியான கணிப்பை அனுப்பி வைத்தவர்களின் பெயர் விபரம் அவர்களின் புகைப்படங்களுடன் வலம்புரியில் வெளியிடப்படும்.

மிகச் சரியான கணிப்பை வெளிப்படுத்தியவர்களில் குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள் தீர்மானிக்கப்படுவர்.

கருத்துக் கணிப்பை அனுப்புவதற்கான இறுதிநாள் **13.11.2024** நள்ளிரவு 12 மணி

**நிர்வாகம், வலம்புரி.**

# தேர்தல்களம்

## பாராளுமன்றில் பசுமைக் கட்சிகளின் பிரதிநிதித்துவம் அவசியம் தேவை

### தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன்



(கொழும்பு)
காலநிலையில் படுபாதக மான மாற்றங்கள் ஏற்பட்டு வருவது உலகை அச்சுறுத்தும் தலையாய பிரச்சினையாக உரு வெடுத்துள்ளது.

இதனை எவ்வாறு எதிர் கொள்ள வேண்டும் என்பது தொடர்பாக ஐக்கியநாடுகள் சபையும் நாடுகளின் அரசாங் கங்களும் முன்னுரிமை கொடுத் துப் பணியாற்றிக் கொண்டி ருக்கின்றன.

இந்நாடுகள் பலவற்றில் பசுமைக் கட்சிகள் உருவாகி சூழல் அரசியலில் காத்திரமான முடிவுகளை எடுக்கும் வகை யில் பாராளுமன்றத்தில் பிரதி நிதித்துவங்களையும் கொண் டிருக்கின்றன. ஆனால் பேரின வாதம் கோலோச்சும் இலங் கையில் மட்டும் சூழலியல் வாதம் இன்னமும் கண்டு கொள் ளப்படாமலேயே உள்ளது.

இதனை மாற்றியமைக்க இலங்கைப் பாராளுமன்றத்தில் பசுமைக்கட்சிகளின் பிரதிநிதித் துவம் அவசியம் வேண்டும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டி யுள்ளார்.

நடைபெறவுள்ள பாராளு மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் சன நாயகத் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து சனநாயகத் தமி ழரசுக் கூட்டமைப்பாக மாம்ப ழச் சின்னத்தில் போட்டியிடு கின்றது. இதன் பரப்புரைக் கூட்டம் கடந்த வியாழக்கி ழமை மல்லாகத்தில் நடை பெற்றபோதே அவர் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தேசியத்தையும் சூழ லியத்தையும் இரண்டு கண் களாகக் கருதுகின்றது. கம்யூ னிசம், சோசலிசம் போன்றே தேசியமும் சூழலியமும் மானு டத்தை வழிநடத்துவதற்கான கோட்பாடுகள்தாம். இலங்கை அரசியலிலேயே தேசியத்தை யும் சூழலியத்தையும் வலியு றுத்துகின்ற ஒரேயொரு கட்சி தமிழ்த் தேசியப் பசுமை இயக் கம் மட்டுமே.

அந்த வகையில் மாம்பழச் சின்னத்தில் போட்டியிடும் அதன் வேட்பாளர்களை மக்கள் வெல் லவைத்து முடிவெடுக்கும் அதி கார பீடமான பாராளுமன்றத் தில் அவர்களுக்கான பிரதி நிதித்துவங்களை வழங்க வேண் டும் என்று கேட்டுக்கொள்கி றேன் எனவும் தெரிவித்துள் ளார். (நி-8)

## நீதியானதும் நிம்மதியானதுமான நாட்டை உருவாக்க எம்முடன் இணையுங்கள்

### தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் இளங்குமரன்



(யாழ்ப்பாணம்)
தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் அரசியல்வாதிகளை தேடி மக்கள் அலைய வேண் டிய தேவை இருக்காது. அரச இயந்திரம் முற்று முழுதாக மக்களுக்காவே வேலை செய்யும் என தேசிய மக்கள் சக்தியின் முதன்மை வேட்பா ளர் கருணநாதன் இளங் குமரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில் மக்களின்மேலே இருந்து அரசியல் செய்யும் நோக்கம் எமக்கு இல்லை. அரசியல் வாதி என்பவன் என்றும் மக்க ளுடன் நண்பனாக இன்ப துன்பங்களில் பங்காளனாக, பிரச்சினைகளின் போது கைகொடுக்கும் உறவாக இருக் கும் அரசியல் கலாசாரமொன் றையே உருவாக்க விரும்பு கின்றோம். நீதியானதும் நிம் மதியானதுமான நாடொன் றினை உருவாக்க நாம் ஆரம் பித்துள்ள பயணம் மிகவும் நீண்டது. இதற்குள் எற்பட்ட பின்னடைவுகள் பிரச்சி னைகள், சவால்கள் எல்லாம் மிகவும் கடினமானவை. இன்று இவை எல்லாவற் றையும் தாண்டி நாம் கனவு கண்ட அந்த எதிர்காலத்தினை உருவாக்கும் பணியினை ஆரம் பித்துள்ளோம். இதன் பங்காளா களாக நீங்களும் இணை யுங்கள் என அவர் தெரி வித்தார். (நி-8)

## போராளிகளுக்கு வாக்களித்து அரசியல் அங்கீகாரம் வழங்குங்கள்

### ஜனநாயக போராளிகள் கட்சித் தலைவர் வேந்தன் கோரிக்கை



(கொழும்பு)
எதிர்வரும் பொதுத் தேர் தலில் மக்கள் வாக்களிப்பின் மூலம் போராளிகளுக்கு ஆணை வழங்க வேண்டும் என ஜன நாயக போராளிகள் கட்சித் தலைவரும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் யாழ்ப் பாணத் தேர்தல் மாவட்ட வேட் பாளருமான சி.வேந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக் கையில், எமது தேசம் இன்று சீரழிந்து செல்கின்றது. எமது மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பாக இன்று யாரும் சரியாகப் பயணிப்பதாக தெரிய வில்லை.

எமது தேச விடுதலைக்காக போராடி வீரச்சாவடைந்த மாவீ ரர்களின் குடும்பங்கள் மற்றும் போராடிய போராளிகளின் குடும்பங்கள் பொருளாதாரம் குன்றிய நிலையில் உள்ளது. இவ்வாறு எமது தேசம் இக் கட்டான சூழ் நிலையிலுள்ளது. இவற்றைச் சரி செய்ய வேண் டிய கடமை போராளிகளிடம் உள்ளது.

ஆகவே தான் இந்தத் தேர் தலில் எமது மக்களிடம் ஆணை கேட்டு நிற்கின்றோம். எனவே மாவீரர் குடும்பங்கள், போராளிகள், மக்கள் என அனைவரும் ஒன்று சேர்ந்து போராளிகளுக்கு வாக்களித்து போராளிகளுக்கான அரசியல் அங்கீகாரம் வழங்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-8)

## உங்கள் வலிகளை நாங்கள் அறிவோம்

### சட்டத்தரணி உமாகரன்



(யாழ்ப்பாணம்)
தமிழ் தேசிய விருட் சத்தை கல்வி உரம் கொண்டு வலுச்சேர்ப் போம் என தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்பாளர் உமாகரன் இராசையா தனது முகநூலில் பதிவிட் டுள்ளார்.

அவர் மேலும் தெரி வித்துள்ளதாவது, கல் வியே எமது ஆயுதம், கல்வி முறையில் மாற்றங் களை ஏற்படுத்த பாராளு மன்றத்தில் குரல் கொடுப் போம்.

அத்துடன் 25 வய திற்குள் உயர் கல்வி முடிக்கப்பட வேண்டும்.

வேலை வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரியும் ஆசி ரியர்கள், பிற ஊழியர்கள் இடமாற்றம் தொடர்பிலும் அரசிற்கு தொடர்ந்து அழுத் தம் கொடுப்போம் எனப் பதிவிட்டுள்ளார். (நி-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உறவுகள், நண்பர்களுக்கு உதவ நாங்கள் அதிகாரத்துக்கு வரவில்லை

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கவோ அல்லது உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு உதவுவதற்கோ நாங்கள் அதிகாரத்திற்கு வரவில்லை என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

மாலம்பே - அரங்கல பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, அரசாங்கத்தின் விஞ்ஞாபனத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வலுவான பாராளுமன்றம் தேவை எனத் தெரிவித்த பிரதமர், ஒரு பணக்கார நாடு அழகான வாழ்க்கையை உருவாக்க வேண்டுமானால், அதைச் செயற்படுத்தக்கூடிய பாராளுமன்றம் தேவை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## யாழ்.இளைஞன்...

ஞன் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறைப் பிரதேசத்தில் வசிக்கும் 23 வயதுடைய இளைஞனாவார்.

குறித்த இளைஞன் நேற்று முன்தினம் இரவு 08.35 மணியளவில் இந்தியாவின் சென்னை நகரை நோக்கிச் செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது விமான நிலைய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கொண்டு வந்த பயணப் பொதியில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போலியாகத் தயாரிக்கப்பட்ட பிரான்ஸ் நுழைவுச்சீட்டு ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபரான இளைஞன் இந்த போலி நுழைவுச்சீட்டைப் பயன்படுத்தி பிரான்ஸுக்கு தப்பிச் செல்ல தயாராக இருந்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட இளைஞன் மேலதிக விசாரணைகளுக்காக குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ம-7)

## மண்வெட்டி...

வம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேபகுதியைச் சேர்ந்த வெற்றிமலர் (வயது-57) என்ற பெண்ணே படுகொலை செய்யப்பட்டவராவார்.

நேற்று மாலை ஈச்சங்குளம் அம்மிவைத்தான் பகுதியில் உள்ள வீட்டில் குறித்த பெண் தனிமையில் இருந்துள்ளார்.

இதன்போது அங்கு அத்துமீறி வந்த இளைஞர் ஒருவர் குறித்த பெண் மீது மண்வெட்டியைக் கொண்டு தாக்குதல் நடத்தியுள்ளார்.

இதனால் படுகாயமடைந்த பெண் நோயாளர்காவு வண்டிமூலம் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும் அவர் சிகிச்சைக்கு முன்பே உயிரிழந்ததாகத் வைத் தியசாலையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம்தொடர்பாக ஈச்சங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)


60 வது பிறந்தநாளை
மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்
10.11.2024



திருமதி சூரியகலா தம்பிராசா
ஆசிரியர் யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்
இன்றைய இனிய நாளில் இன்னும் பல வளங்களோடு பல்லாண்டு காலம் இனிதே வாழ வாழ்த்துகின்றோம்.
(2401)
நல்லூர் வடக்கு, விநாயகர் வீதி, யாழ்ப்பாணம்.
077 883 5828, 077 839 3689
வாழ்த்துவோர்: கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்


## மின்சாரக்...

தம்புள்ளையில் நேற்று இடம்பெற்ற தேசிய மக்கள் சக்திப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், சுமார் ஒன்றரை ஆண்டுகளில், மின்சாரத் துறையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்துவோம். இந்த மின் கட்டணத்தை 30% வீதத்திற்கும் அதிகமாகக் குறைக்கவுள்ளோம். அதற்கு எங்களுக்கு கொஞ்சம் கால அவகாசம் கொடுங்கள். எரிபொருள் விலையும் அவ்வாறுதான். இவற்றை நாங்கள் செய்வோம் என்றார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2024.11.09
சீட்டிழுப்பு இலக்கம் 5651
V 0 4 3 7 3 9
அத சம்பத V 3 7 3 9
சீட்டிழுப்பு இலக்கம் 226
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.11.09
சீட்டிழுப்பு இலக்கம் - 1681
B 24 31 46 50 B
Double Chance 73943

மெகா பவர்
திகதி 09/11/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1999
J 08 12 27 39 70
197178

லக்கி 7 VIP
திகதி 2024.11.09
சீட்டிழுப்பு இலக்கம் 0477
H 1 3 3 7 7 0 H

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3893
சீட்டிழுப்பு திகதி 09.11.2024
M 08 37 55 76
M 032053
தேசிய லொத்தர் சபை

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.11.09
சீட்டிழுப்பு இலக்கம் 960
கன்னி 15 25 26 53 கன்னி
123745 46

சசிரி
வெற்றி வாரம் 554
சீட்டிழுப்பு திகதி 09.11.2024
சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 05 16 45
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பர் பல்லன
09.11.2024 359
J 8 2 8 0 9 7
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,295,184.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4337
சீட்டிழுப்பு திகதி 09.11.2024 சனிக்கிழமை
08 20 47 50 மேஷம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,468,932.40
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2625
சீட்டிழுப்பு திகதி 2024.11.09 சனிக்கிழமை
05 14 17 43 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 67,750,778.40
DLB

கப்ருக
D 21 17 19 49 60
1801
09.11.2024 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.554,953,624.40
DLB

சனிதா
திகதி 09.11.2024 வெற்றி வாரம் 4786
35 50 55 66 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,789,383.20
ரூ. 100,000/-
DLB

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2451
சீட்டிழுப்பு திகதி : 2024.11.09
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.81,105,386.40
10 13 39 64 H
DLB


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத் தேர்தல் - 2024








தமிழர் தேசமாய் சிந்திப்போம்
செயற்படுவோம்

- நேர்மையான அப்பழுக்கற்ற தலைமை!
- பார்பெர்மிட் கேட்காத, பெறாத ஒரே கட்சி!
- அமைச்சுப் பதவிகளை நாடாத, வளைந்து கொடுக்காத நேர்மை!
- தேர்தல் காலத்தில் ஒரு பேச்சும் கொழும்பிலும் வெளிநாட்டிலும் வேறு பேச்சும் என்று மக்களை ஏமாற்றாத தலைமை!
- ஜேவிபி அரசாங்கத்தை பொறுப்புக் கூற வைக்கக் கூடிய ஒரேயொரு தமிழ்த்தரப்பு!

(C-182)

**தமிழ் தேசிய மக்கள் முன்னணி மாத்திரமே!**

நேர்மையான தமிழ் தேசியத்திற்கான சிவில்
சமூக செயற்பாட்டாளர்கள்





## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

யாழ் மாநகரை தளமாக கொண்டு இயங்கிவரும் பிரபல மின்னியல் சாதன விற்பனைக் காட்சியறை ஒன்றிற்கு சிறந்த விற்பனைப் பிரதிநிதிகளை எதிர்பார்க்கிறோம்.

077 966 9498 (531)



V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
வீமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1555)


# கொழும்பில் துப்பாக்கிச் சூடு ஒருவர் காயம்

(கொழும்பு)

கொழும்பு, தாமரைக் கோபுரத்திற்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (08) இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர்கள் தொடர்பில் இதுவரை எந்த விதத் தகவல்களும் கிடைக்கவில்லை என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7)


## மணமகள் தேவை

யாழில் தனியார் நிறுவனத்தில் நல்ல பதவியிலுள்ள 1986 ஆம் ஆண்டு பிறந்த மணமகனுக்கு பெற்றோர் நற்குணமுள்ள மணமகளை எதிர்பார்க்கின்றனர்

தொடர்புகளுக்கு :

077 023 4723 (528)



## காணி விற்பனைக்கு

தனங்கிளப்பில் பூநகரி பிரதான வீதியில் இருந்து 100 மீற்றர் அருகாமையில் 4 பரப்பு, 4 3/4 பரப்பு காணி சிறிய வீடு மின் இணைப்பு மற்றும் நான்கு பக்கமும் முட்கம்பி வேலி, தென்னைகள் உள்ளடங்கியது.

விலை பரப்பு 6 1/2 லட்சம் (2581)

077 220 3386



## தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள விற்பனை முகவர் நிறுவனத்திற்கு

- ◆ விற்பனைப் பிரதிநிதி (Sale rep)
- ◆ விற்பனை உதவியாளர்

தேவை (2584)

077 985 1946



## Happy Supermarket - உரும்பிராய்

| | | | |
|---|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 235/= | Max 3Kg | |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= | | |
| 1Kg றவை | - 285/= | | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 280/= | | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 385/= | | |
| 1Kg சம்பா | - 226/= | | |
| 1Kg தீட்டல் பச்சை | - 230/= | | |
| 1Kg பயறு | - 659/= | | |
| 1Kg சோயா | - 440/= | | |
| 750 ml நல்லெண்ணை | - 1460/= | ~~1550/=~~ | |
| 400g சஸ்ரயன் | - 3525/= | ~~3900/=~~ | |
| 180 ml சன்சில்க் சம்போ | - 440/= | ~~480/=~~ | |
| 01 ஓசன் மீன்ரின் | - 380/= | ~~500/=~~ | |
| 70g பேபி சோப் | - 115/= | ~~145/=~~ | |




தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி. (530)

Happy Supermarket
0777 8080 30



## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1 UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN
GUARANTEED TO 7.5 in IELTS Exam.
PASS in UK A1 Exam.
Exam REGISTRATION CENTER. (2508)
Practical to UKVI on Computer
(வாழ்க்கை துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam / IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்
OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.
T.P : 077 780 3970, 074 007 1970



## யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவைகள்

யாழ் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்

38,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

மற்றும் அனைத்து நாடுகளுக்குமான ரிக்கற்றுக்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். (530)

APEX TRAVELS
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(... அரிப்பிடத்திற்கு அருகில்)



## காணி விற்பனைக்கு

கொடிகாமம் சந்தியில் இருந்து 300 மீற்றர் பருத்தித்துறை வீதியில் 20 பரப்பு 6 குளி விஸ்தீரணம் கொண்ட தென்னங்காணி விற்பனைக்கு உண்டு. (2576)

077 436 6704
075 164 0104


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல. 191, ... யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.11.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org